இ - ள். மலரோடின் தழைகலந்து மீண்ட மாலையையுடைய இறைவனே! முகில் தஞ்சும் மாளிகை நெருங்கிய மாறைநாட்டு விரோதயனாகிய வாணனது வெற்பில், அணிக்கியலுங் கச்சுப் பொருந்திய முலையழகுடைய இளந்தோகை போல்வாளை நீகூறிய குறியிடமாகிய மூங்கில் வேலியாய் வளர்ந்த புனத்தில் இக்கணம் போய்க்கண்டு உனை யான்வந்து காணுமளவும் வருத்தமொழிவாய். எ - று.

மழை - முகில். இழை - ஆபரணம். வார் - கச்சு. ஏர்-அழகு. **தோகை- ஆகுபெயர். சாரல் - ஆகுபெயர்.**

என்னை,—தலைவன் குறிகூறியது 'புனமே யிடம்' என்றதனா லென்றுணர்க. இங்ஙனம் மூங்கில் வேலிப்புனமென்று அதிகாரப்படக் கூறியவாறென்னை யெனின், இக்கிளவிக் கடுத்த கிளவி "குறிவயிற்சேறல்" என்றலின், தலைவி யிருக்குமிடமுங் குறியென்றலின், அக்குறியிற் குறியிடமெல்லா மொன்றாய் வருதல் விதியாதலான் 'மூங்கிற்புனம்' என்றதிகாரப்பட்டவாறுணர்க. அன்றியும் வரைவுகடாவுதலில் இரவு வருவானைப் 'பகல் வருகென்றல்' என்னுங் கிளவிச் செய்யுளில் 'கழைவிளையாடுங் கடிபுனங் காத்தும்' என்று பாங்கி கூறியவதனானும், இச்செய்யுளில் புனங் கூறுமிடமெல்லாம் மூங்கி லுடையாளமன்றி வேறோருடையாளங் கூறுவதின் றெனவுணர்க.

தார் - மாலை. மலராற் கட்டுதல் மாலையாகலான் மலர்கூறாது, தழையிடை யிடையே கட்டுதலின் தழை கூறினார். அண்ணல் - இறைவன். தணிதல் - ஒழிதல். தகவின்மை-வருத்தம். முன்வள ரிரண்டுங் கண்வளர்தல். பின்வளரிரண்டும் நீடல். 'கழைவளர் சாரலிக்கணம்போய்' என மாறுக. 'மீண்டு' என்பது அவாய் நிலையான் வந்தது. (௫௦)

13 குறிவயிற் சேறல்.

குறிவயிற்சேறல் எ - து. தலைவன் கூறிய குறியிடத்துத் தலைவியைக் காணப் பாங்கன்போதல்.

பாரித்த திண்மையெம் மண்ண லுண் ணீரைப் பருகிநின்று
பூரித்த செவ்விள நீர்களுந் தாங்கியப் பூங்கொடிதான்
வாரித்த லம்புகழ் வாணன்றென் மாறை வரைப்புனஞ்சூழ்
வேரித்த டம்பொழில் வாய்விளை யாடுங்கொன் மேவிநின்றே.

இ - ள். தலைவன் கூறிய அப்பூங்கொடிதான் கடல்சூழ்ந்த நிலவுலகம் புகழும் வாணனது தென்மாறைநாட்டு மூங்கில்வேலியை யுடைய தினைப்புனஞ் சூழ்ந்த மணம்பொருந்திய பெரிய சோலையிடத்துப் பொருந்தி நின்று, வீரமில்லா தார்க்கும் வீரத்தைப் பிறப்பித்த எம் அண்ணலது

உள்ளத்துள்ள கலையறிவாகிய நீரைப்பருகி, நிலைகொண்டு விம்மிய செவ்விளநீர்போன்ற முலைகளையுந் தாங்கி, விளையாடுமோவென எண்ணிக்கொண்டு சென்றான். எ - று.

பாரித்தல் - பிறப்பித்தல். திண்மை - வீரம். உண்ணீர் - உள்ளத்துள்ள கலையறிவு. பூரித்தல் - விம்முதல். உம்மை - அசை. வாரி - கடல். தலம் - நிலவுலகம். வரை - மூங்கில். வேரி - மணம். தடம்பொழில் - பெரியசோலை. **கோல் - ஐயம். நெஞ்சம்** - முன்னிலையெச்சம். 'வரைப்புனம்' என்பது வரைக்கட்புனமென அமையாதோ வெனின், இவ்விடத்து இவ்வியற்றென் னுஞ் செய்யுளில் 'மணிவரை சூழ்புனம்' எனவும், பாங்கன் இறைவனைத் தேற்றுஞ் செய்யுளில் 'கழைவளர்சாரல்' எனவும், இச் செய்யுளில் 'வரைப்புனம்' எனவும் மூங்கிலே யதிகாரப்பட்டு வருதலின் மலையாகா தென்க. (௫௧)

14 இறவிமையக்கூறண்டல்.

(இது வெளிப்படை.)

கானே யளகங் கரும்புய லேயியல் கார்மயிலே
மானே விழிமுக மாமதி யேதஞ்சை வாணன்வெற்பில்
தேனேய் தொடையலச் சேயனை யான்சொன்ன சேயிழையாள்
தானே யிவளிது வேயிட மாகிய தண்புனமே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பிடத்திருக்கும் முருகக்கடவு ளனைய வண்டுபொருந்திய மாலையை யுடைய எம்மிறைவன் சொன்ன இடமாகிய தண்புனம் இதுவே; இயலாகியபுயலே, மணம்பொருந்திய அளகபாரமாயிருக் கின்றது; கார்காலத்துமயிலே, இயலா யிருக்கின்றது; மானே, விழியாயிருக் கின்றது; நிறைமதியே, முகமா யிருக்கின்றது; ஆதலால், அச் சேயிழை யாள்தானிவளே. எ - று.

கான் - மணம். எய்தல் - பொருந்துதல். இயல் - சாயல். கார் - கார் காலம். விழி-கண். மாமதி-நிறைமதி. தேன் - வண்டு. தொடையல் - மாலை. சேய் - முருகக்கடவுள்.

'கரும்புயலே கானேயளகம்' எனவும், 'கார்மயிலே யியல்' எனவும், 'மதியே முகம்' எனவும், 'தஞ்சைவாணன் வெற்பிற்சேய்' எனவும் மாறுக. ஈற்றசை ஏகாரமொன்று மொழித்து ஏனைய ஏகாரமெல்லாந் தேற் றத்தின்கண் வந்தன. **நெஞ்சம்** - முன்னிலை யெச்சம். 'அச்சேயனையான் சொன்ன'. என்பது இடைநிலை விளக்கு. (௫௨)

இகழ்ந்ததற் கிரங்கல்.

இகழ்ந்ததற் கிரங்கல் எ - து. தலைவி பேரழகைக்கண்டு பாங்கன்காணு முன்னம் எம்பெருமானை அறிவின்றி இகழ்ந்தனமென்று இரங்கிக்கூறல்.

கொலைகா லயிற்படை நேரியர் கோனகங் கோடவங்கைச்
சிலைகால் வளைத்துத் திருத்திய வாணன்றென் மாறைவெற்பில்
முலைகால் கொளக்கண் டிளைத்தநுண் ணூலிடை முற்றிழைகண்
வலைகால் பிணிப்பவந் தார்வருந் தாரல்லர் மாலுழந்தே.

இ - ள். கொல்லுந் தொழிலை உமிழ்கின்ற வேற்படையையுடைய சோழனது உள்ளம் மாறுபட அழகிய கைச்சிலையைக் காலால்வளைத்து, அம் மாறுபாட்டைத் திருத்திய வாணனது தென்மாறை வெற்பிடத்து, முலை யிடங்கொள்ளக் கண்டதனால் இளைத்த நுண்ணிய நூல்போன்ற இடையையும், அணியும் அணியினிற் றாழ்வின்றி முற்றுப்பெற்ற அணியையு முடையாளது கண்ணாகிய வலை காலிற் பிணிப்ப வந்தவர் ஆசைநோயை அநுபவித்து வருந்தாரல்லர். எ - று.

எனவே, — வருந்துவா ரென்றவா றாயிற்று. **கொலை** - ஆகுபெயர். காலுதல் - உமிழ்தல். அயிற்படை - வேற்படை. நேரியர்கோன் - சோழன். அகம் - உள்ளம். கோடல் - மாறுபடல். அம் - அழகு. 'கால்வளைத்து' என் புழி வேற்றுமைத்தொகை. திருத்தல் - செவ்விதாக்கல். கால்கொளல் - இடங்கொளல். **முற்றிழை** - அன்மொழித்தொகை. பிணித்தல் - கட்டல். உழத்தல் - அனுபவித்தல்.

† "கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்." — என்னுங் குறளானு முணர்க.

நெஞ்சம் - முன்னிலையெச்சம். (௫௩)

தலைவனைவியத்தல்.

தலைவனை வியத்தல் எ-து. பாங்கன் தலைவி கண்வலையிற் சிக்கி அத்தடை யோடுந் தலைவன் நம்மிடத்து வந்தது வியப்பென்று அதிசயித்துக் கூறல்.

தலங்கா வலன்றஞ்சை வாணன்முந் நீர்பொருந் தண்பொருந்தத்
திலங்கார் வல்வடக் கொங்கைவெற் பாவிணை நீலவுண்கண்
பொலங்காம வல்லி கடைந்தவப் போதுபுடைபெயர்ந்து
கலங்கா திருந்ததெவ் வாறெம்பி ரான்றன் கலைக்கடலே.

---

† திருக்குறள், செ. ௧௧௩௭.

இ - ள். இரண்டு நீலம்போன்ற உண் கண்ணையுடைய மொன்மய மாகிய காமவல்லிக் கொடிபோன்றவள், உலகிற்குக் காவலனாகிய தஞ்சை வாணனது கடலை யெதிருந் தண்ணிய பொருநையாற்றின்கண் பிறந்தொ ளிரும் முத்துக்களைக்கோத்த வலிய வடம்பூண்ட கொங்கையாகிய வெற்பி னாலே கடைந்த அப்போது, அசைந்து எம்பிரான்றன் கலைக்கடலான து கலங்காதிருந்த தெவ்வாறு. எ - று.

எனவே, — எனக்கிது வியப்பாயிருந்ததென்றவா றாயிற்று. தலம் — உலகு. ப்ாதலநீர், பூதலநீர், மீதலநீர், இம்மூன்று நீருங் கூடியதால் கடல்-‡ முந்நீர் எனப் பெயராயிற்று. பொருதல் - எதிர்தல்.

பொருந்தம் - பொருநையாறு; பொருந் என்னும் தொழிற்பெயர் அஃறிணை யாதலின் ஐகாரவீறுபெற்றது. ஆரம் - முத்து. பொருநை யாறுங் கடலும் எதிர்ந்து கலந்தவிடத்துப். பிறத்தலான் பொருநையிற் பிறந்த முத்தென்றார். பொலம் - பொன்.

‡‡ "பொன்னென் கிளவி யீறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரம்
செய்யுண் மருங்கிற் றொடரிய லான."— என்பதனாலறிக.

காமவல்லி - கற்பகத்திற் படருங் கொடி; ஆகுபெயர். கடைதல் - ஈண்டு அறிவைச் சுழலச்செய்தல். புடைபெயர்தல் - அசைதல். கலைக் கடல் – கல்வியறிவாகிய கடல். (ருச)

17 தலைவியைவியத்தல்.

தலைவியைவியத்தல் எ - து. தலைவியைப் பாங்கன் வியந்து கூறல்.

வெங்கோன் மழைபொழி வானவர் போர்வென்ற மீனவர்தம்
செங்கோன் முறைமை செலுத்திய வாணன்றென் மாறைவெற்பில்
நங்கோன் மெலிய நலிகின்ற காமவெங் நஞ்சினையிப்
பைங்கோன் மணிவளை யார்தணி யாரல்லர் பார்வைகொண்டே.

இ - ள். வெவ்விய அம்புமாரியைப் பொழிகின்ற சேரரது போரை வென்ற மீனவருடைய நீதிமுறைமையை எண்டிக்குஞ் செலுத்திய வாண னது தென்மாறை வெற்பிடத்திருக்கின்ற நம் பெருமான் மெலிவடைய வருத்தஞ் செய்யாநின்ற காமமாகிய வெவ்வியவிடத்தை இந்தப் பசிய கோலுடைய நல்ல வளையையுடையார் தமது அருட்பார்வைகொண்டு தணிப்பார். எ - று.

---

‡ "நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலு முடைமையின்" இவ்வாறு கூறப்பட்டதென்பர்.— நச்சினார்க் கினியர்.

‡‡ தொல். எழு. புள்ளிமயங்கியல், ரு சுஉ.

வெங்கோல் - அம்பு. வானவர் - சேரர், மீனவர் - பாண்டியர். இறைமைத்தன்மை யுடையராதலாற் உயர்த்துக் கூறியது. செங்கோல் - செவ்வியநீதி. நலிதல் - வருத்தல். கோல் - வளையிற்புள்ளி. **கோலம்** என்பது கடைக்குறையாய்க் **கோல்** என நின்றதென்பாருமுளர். **நெஞ்சம்** - முன்னிலையெச்சம்.

இச் செய்யுளில் வியத்தற்பொருண்மை வந்தது எங்ஙனமெனின், எம்பெருமான் இறந்துபடாமற் காத்து இன்றுங் குறியிடத்துத் தனித்து வந்து நிற்றலின், இவர் பார்வைகொண்டு தணிப்பானெனக் கூறியது வியப்பின்மேனின்றது. (௧௫)

இவ் வைந்துபாட்டும் பாங்கன் தன்னுட் கூறியது.

18 **தலைவன்றனக்குத் தலைவி நிலைகூறல்.**

தலைவன் றனக்குத் தலைவிநிலை கூறல் எ - து. பாங்கன் தலைவி குறியிடத்துத் தனித்து நிற்கின்ற நிலையைக் கண்டுவந்து தலைவற்குக் கூறல்.

வளங்கனி மாறை வரோதயன் வாணன் மலயவெற்பா
உளங்கனி காத லுடனின்ற தானின் னுடலமெல்லாம்
களங்கனி போலக் கருகிவெண் கோட்டுக் களிறுண்டதோர்
விளங்கனி போல்வறி தாகிறை வாங்கிய மென்கொடியே.

இ - ள். வளமைபழுத்த மாறைநாட்டு வரோதயனாகிய வாணனது மலையவெற்பனே! நின்னுடலமெல்லாங் களம்பழம்போலக் கருக, வெண்ணிறக் கோடுடைய யானை யுண்டதோர் விளங்கனிபோல் இல்லாமையுடையதாகி நின்று, நிறையாகிய குணத்தைக்கொண்ட மெல்லிய கொடியானது,நீசொன்ன குறியிடத்து உளங்கனிந்தகாதலுடன் நின்றதாதலால், நீ அக்குறியிடத்துச் செல்வாயாக. எ - று.

கனிதல் - பழுத்தல். **கருக** என்பது **கருகி** யெனத் திரிந்து நின்றது. என்னை, —

‡ "செயிர்த்தவள் சிவந்து நோக்கிச் சீறடி சென்னி சேர்த்தி
யயிர்ப்பதென் பணிசெய் வேனுக் கருளிற்றுப் பொருள தென்ன
வுயிர்ப்பது மோம்பியொன் றுமுணாயிலை யாகி மற்றிப்
பயிர்ப்பில்பூம் பள்ளிவைகு பகட்டெழின் மார்ப வென்றாள்." —

என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளில் **நோக்கி** என்பது **நோக்க** எனத் திரிந்து நின்றதுபோலக் கொள்க. 'மின்கொடியே' என்று பாடமோதுவாருமுளர். வறிதாய் - இல்லாமையை யுடையதாக. **வெற்பின்**

‡ சிந்தாமணி, விமலையாரிலம்பகம், **செ. ௧௦௪.**

என்று பாடமோதி, இறைவா என்னும் முன்னிலை யெச்சமென்று பொருள் கூறுவாருமுளர். (௫௬)

19 தலைவன்சேறல்.

தலைவன் சேறல் எ - து. பாங்கன் சொற்படி தலைவன் குறியிடத்துப் போதல்.

புறங்கூ ரிருட்கங்குல் போன்றக நண்பகல் போன்றபொங்கர்
நிறங்கூர் படைக்கண்ணி நின்றன ளேகிழ லைச்சுளித்து
மறங்கூர் களிற்றண்ணல் வாணன்றென் மாறையில் வாணுதலாள்
அறங்கூர் மனத்தரு ளானின்ற தாமென தாருயிரே.

இ - ள். தன்னிழலைப் பிறிதோர் யானையெனக் கருதித் திரும்பிக் கோபமிகுங் களிற்றையுடைய அண்ணலாகிய வாணன் தென்மாறை நாட்டுப் புறத்தில், மிகுந்த இருண்ட கங்குலையொத்து அகத்தின் மாணிக்கங்களி னொளியான் நல்ல பகல்போன்ற சோலையிடத்து, வாணுதலாளாகிய வொளிமிகுந்த படைக்கண்ணி நின்றனளே! அந்நின்ற தோற்றம் முறைமைகூர்ந்த மனத்தருளினாலே என தாருயிர்நின்றதாம். எ - று.

கூர்தல் நான்கும் மிகுதல். தழைகளினது செறிவால் புறங்கூர் இருட்கங்குல் போன்றது. பொங்கர் - சோலை. நிறம் - ஒளி. படைக்கண்ணி - உவமைத்தொகை. சுளித்தல் - திரும்பல். மறம் - கோபம். களிறு - யானை. அறம் - முறைமை. நெஞ்சம் - முன்னிலையெச்சம். (௫௭)

20 தலைவியைக் காண்டல்.

(இது வெளிப்படை.)

பாகையுந் தேனையும் போன்மொழி யார்தமிழ்ப் பைந்தொடையும்
வாகையுஞ் சூடிய வாணன்றென் மாறை வளமுமவன்
ஈகையும் போலு மெழிலியை நோக்கி யிரங்குபுள்ளுந்
தோகையும் போனின்ற வா தனி யேயிந்தச் சோலையிலே.

இ - ள். இந்தச் சோலையிடத்துத் தனியே என்வரவை நோக்கிப் பாகையுந் தேனையும்போன்ற மொழியார் நின்ற முறைமை, தமிழ்மாலையும் வாகைமாலையுஞ் சூடிய வாணனது தென்மாறைநாட்டு வளமும் அவன் கொடையுமொக்கும், மேகத்தைநோக்கி யிரங்குஞ் சாதகப்புள்ளையும் மயிலையு மொக்கும். எ - று.

'மொழியார் நின்றவா' என மாறுக. தமிழ்ப்பைந்தொடை - தமிழ் மாலை. வாகை - ஆகுபெயர். வளம் - செழுமை; வளம் எல்லாருக்கு

முபகரித்தலால். வளீமும், ஈகையும் எல்லாருக்கு முபகரித்தலான் மேகம் ஒப்பாயிற்று. ஈகை - கொண்டை. எழிலி - மேகம். நோக்கி - வரவுகருதி. இரங்கல் - ஒலித்தல். புள் - சாதகப்புள். தோகை - மயில். **நெஞ்சம்** - முன்னிலையெச்சம். வாகை மாலை - வென்றோர் சூடுவது. 'பாகையுந் தேனை யும் போன்மொழியார்' நின்றவாறு 'இரங்கு புள்ளுந் தோகையும்' ஒப் பென்று பயனிலைகொண்டவா றுணர்க. (ருஅ)

௨௰ கலவியின் மகிழ்தல்.

கலவியின் மகிழ்தல் எ - து. புணர்ச்சியின் மகிழ்தல்.

யாரும்பர் தம்பத மென்போல வெய்தின ரிம்பரம்பொன்
வாருந் துறைவையை சூழ்தஞ்சை வாணன் மலயவெற்பில்
தேருந் தொறுமினி தாந்தமிழ் போன்றிவள் செங்கனிவாய்
ஆருந் தொறுமினி தாயமிழ் தாமென தாருயிர்க்கே.

இ - ள். அழகிய பொன்னையொக்குந் துறைகளையுடைய வையை யாறு சூழ்ந்த தஞ்சைவாணனது பொதியவெற்பில், ஆராயுந்தோறு மாராயுந் தோறுந் தெவிட்டாத இன்பமாந் தமிழையொத்தவளது செங்கனி வாயி னூறிய நீர் நுகருந்தோறும் தெவிட்டாமல் இன்பமாய், என தாருயி ரிறந்து படாமைக்குக் காரணமாகிய வமிழ்தாகின்ற தாதலால், இவ்வுலகில் உம்பர் தம் பதத்தை என்போல வெய்தினர் யார்? யானொழிய ஒருவரு மில்லை. எ - று.

உம்பர் - தேவர். இம்பர் - இவ்வுலகு. வார்தல் - ஒழுகுதல். தேர் தல் - ஆராய்தல். **செங்கனிவாய்** - ஆகுபெயர். ஆர்தல் - நுகர்தல். ஆரு யிர் - அரிய வுயிர். மலய வெற்பு - பொதியவெற்பு. 'மலய வெற்பிற் றமிழ்' என்றது அவ்வெற்பில் தமிழ்பிறத்தலா னென்க. இறப்பைத் தீர்த் தலால் **அமிழ்தம்** என்றது. 'வாணன் மலயவெற்பு' என்புழி ஆற னுருபு நிலப்பிறிதின்கிழமைப் பொருளாய்த் தொக்கது. **நெஞ்சம்** - முன் னிலை யெச்சம். (ருகூ)

௨௧ புகழ்தல்

புகழ்தல் எ - து. புகழ்ந்து கூறல்.

தழல்கண்ட தன்ன கலிவெம்மை யாறத்தன் றண்ணளியால்
நிழல்கண்ட சந்திர வாணன்றென் மாறை நிழல்பொலியுங்
கழல்கண்ட தன்ன கதிர்முத்த மாளிகைக் காரிகைநின்
குழல்கண்ட பின்னல்ல வோவற வீருட் குளித்ததுவே.

இ - ள். தழலைக்கண்டதுபோன்ற கலியினது வெப்பந் தணியத் தன தருளாகிய நிழலாக்கிக்கண்ட சந்திரவாணனது தென்மாறை நாட்டிற்

ளேன்றும் ஒளியிருந்த கழற்காய்போல, பரிதாகிய கதிரொறிக்கும் முத்து மாலிகையையுடைய காரிகை! நினது கூந்தலைக் கண்டபின்னல்லவோ முன் வெளிப்பட்டிருந்த அறலானது நாணி இப்போது நீருட்குளித்திருக்கின்றது. எ - று.

தழல் - நெருப்பு. கலி - கலியுகம். வெம்மை - வெப்பம். அளி - அருள். நிழல் - ஒளி. பொலிதல் - மிகுதல். புகழ் - ஆகுபெயர். கதிர் - ஒளி. காரிகை - அண்மைவிளி. குழல் - கூந்தல். அறல் - கருமணல். குளித்தல் - மூழ்கல். 'நின் குழல்' என்புழி ஆறும்வேற்றுமை யுறுப்புத் தற்கிழமைக்கண் வந்தது. 'அல்லவோ' என்புழி ஓகாரம் எதிர்மறை.

௨௩ பாங்கியோடுவருகேனப்பகர்தல்.

பாங்கியொடு வருகெனப் பகர்தல் எ - து. இனி நீவருங்கால் நின் உயிர்ப்பாங்கியொடு வருகவெனக் கூறல்.

என்கா தலினுன் றியம்புகின் றேனிங் கினிவருங்கால்
நின்கா தலியொடு நீவரல் வேண்டு நிலமடந்தை
தன்கா தலன்றஞ்சை வாணன்றென் மாறைத்தண் டாமறைவாழ்
பொன்காதல் கொண்டு தொழுஞ்சிலம் பாரடிப் பூங்குயிலே.

இ - ள். நிலமடந்தை தனக்குக் கணவனாகிய தஞ்சை வாணனது தென்மாறைநாட்டிலிருக்கும் தண்ணியதாமரையில்வாழுந் திருமகள் ஆசைகொண்டு பணியுஞ் சிலம்பார்ந்த வடிகளையுடைய பூங்கொடிபோல்வாய்! எனது காதன் மிகுதியால் ஒருசொல் சொல்லுகின்றேன், இக் குறியிடத்து இனிமேல் வருங்கால் நின்னிடத்திற் காதலுடையவளாகிய உயிர்ப்பாங்கியொடு நீ வருதலைச் செய்யவேண்டும். எ - று.

காதல் - ஆசை. இயம்பல் - சொல்லல். காதலி - உயிர்ப்பாங்கி. காதலன் - கணவன். பொன் - திருமகள். காதல் - ஆசை. பூங்கொடி - ஆகுபெயர். 'நிலமடந்தைதன் காதலன்' என்றது பூவைநிலை யென்னும் புறப்பொருளிலக்கணத்தால் வாணனை மாயோனாகக் கூறியவா றுணர்க. என்னை,—

‡ "மாயோன் மேய வன்பெருஞ் சிறப்பிற்
றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்." — என்னும் வேட்சிக்கரந்தையிற் கூறிய சூத்திரத்தா னுணர்க. (௬௧)

---

‡ தொல். பொருள். புறத்திணையியல், ௬ ௫.

௨௳ பாங்கிற்கூட்டல்.

பாங்கிற்கூட்டல் எ - து. தலைவன் தலைவியை ஆயத்துச் செலுத்தல்.

என்னுாடு நின்ற விளங்கொடி யேபங்க மேந்துசூழாக்
தன்னுாடு செல்லுஞ் சலஞ்சலம் போற்றஞ்சை வாணன்வெற்பில்
பொன்னுாடு செல்லும் புகழ்மணி போனின் புடையகலா
மின்னுாடு நுண்ணிடை யாருட னீசென்று மேவுகவே.

இ - ள். என்னுள்ளே நிலையாய்நிற்கின்ற இளங்கொடிபோல்வாய்! சங்கக்கூட்டத்துள்ளே பொருந்திச்செல்லாநிற்குஞ் சலஞ்சலமென்னுஞ் சங்குபோலவும், தஞ்சைவாணனது பெரியவெற்பிடத்துப் பொன்னுள்ளே செல்லும் மாணிக்கம்போலவும், நின்பக்கம் அகலாத மின்பிணங்கும் நுண்ணிய இடையாராகிய ஆயக்கூட்டத்துடன் நீபோய்ப் பொருந்துக. எ - று.

இளங்கொடி - ஆகுபெயர். 'சூழாக் தன்னுாடேந்து' எனமாறுக. இப்பியாயிரஞ் சூழ்ந்தது இடம்புரி; இடம்புரியாயிரஞ் சூழ்ந்தது வலம்புரி; வலம்புரி யாயிரஞ்சூழ்ந்தது சலஞ்சலம். புகழ்மணி-மாணிக்கம். சலஞ்சலம் சங்குகளிற் சிறத்தலானும், மாணிக்கம் மணிகளிற் சிறத்தலானும் உவமை கூறியதென் றுணர்க. புடை - பக்கம். ஊடல்-பிணக்கல். மேவுதல் - பொருந்தல்.

இக்களவியில் மாலைசூட்டித் தலைவியை விடுத்தானென்ப தாயின், இச்செய்யுளில் முல்லைமாலைசூட்டி விடுத்தானென்ப தில்லையாலெனின், தலைவி ஆய்க்கூட்டத்திற் சார்ந்தவுடன் தலைவியைநோக்கி நினக்கு முல்லைமாலை சுனைப்புனல்சூட்டியவாறு நன்றாலென்று பாங்கி கூறியவதனான் இங்ஙனங் கூறப்பட்டது. வரைவியலில் தலைவனைப் பாங்கிவாழ்த்தற் செய்யுளில் † 'சங்கிரக்காட்டு நீயன்றுசூட்டலரோ' என்றதனானுமறிக.

இவற்றுள் முன்னைய மூன்றும் சார்தல், கேட்டல், சாற்றலென்னும் மூன்றற்குரிய; 'பாங்கன்கழறல்' முதல் 'கிழவோன்வேட்கை தாங்கற்கருமைசாற்றல்' ஈறுக்கூறிய நான்கும் எதிர்மறைக்குரிய; 'பாங்கன்தன்மனத்தழுங்கல்' முதல் 'தலைவன் தனக்குத்தலைவி நிலைகூறல்' ஈறுகக்கூறிய பதினொன்றும் நேர்தற்குரிய; 'தலைவன்சேறல்' முதல் 'புகழ்தல்' ஈறுகக்கூறியநான்குங் கூடற்குரிய; தலைவன் தலைவியைப் பாங்கியொடுவருகெனப் பகர்தலும், தலைவன் தலைவியைப் பாங்கிற்கூட்டலு மாகிய இரண்டும் பாங்கிற்கூட்டற்குரிய வெனக்கொள்க. (சஉ)

பாங்கற்கூட்டம் - முற்றும்.

---

† வரைவியல், சே. உ௮ரு.

அஃதாவது, தலைவி வேறுபாட்டைக்கண்டு புணர்ச்சியுண்மை யறிந்தாராய்ந்து தன்மதியை யுடன்படுத்தல்.

* "முன்னுறவுணர்தல் குறையுறவுணர்த
லிருவரு முளவழி யவன்வர வுணர்தலென்
றாங்குமூ வகைத்தே பாங்கிமதி யுடன்பாடு." — என்னுஞ் சூத்திரவிதியால் பாங்கிமதியுடன்பாடு மூவகைப்படும். அவற்றுள், —

முன்னுறவுணர்தலாவது - தலைவி பாங்கற்கூட்டத்தின்கண் பாங்கியை நீங்கிச்சென்று தலைவனைப்புணர்ந்து மீண்டுவந்து பாங்கிமுன்னுற்றவழி, பாங்கி தலைவியது வேறுபாடுகண்டு அதனானே கூட்டமுண்மையறிதல்.

குறையுற வுணர்தலாவது - பாங்கி தலைவன் தழையுங் கண்ணியுங் கொண்டு தன்பாற் குறையுற்று நிற்பக்கண்டு அதனானே கூட்டமுண்மை யறிதல்.

இருவரு முளவழி யவன்வர வுணர்த லாவது - தலைவியும் தானும் ஒருங்கிருந்துழி, தலைவன் அவ்வாறுவரக்கண்டு அதனானே கூட்டமுண்மை யறிதல்.

** "நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்புஞ் செலவும் பயில்வுமென்
றிவ்வகை யேழினு மையமுற் றோர்தலும்." — ௭ - து.

நாற்றமாவது - தான் பண்டு பயின்றறியாததோர் நாற்றம். தோற்றமாவது - கூட்டத்தாற்பிறந்த தோரழகு. ஒழுக்கமாவது - தெய்வந்தொழாமை முதலியன. உண்டியாவது - ஊண்பண்டையிற் சுருங்குதல். செய்வினை மறைத்தலாவது-தான்செய்யும் வினையைப் பாங்கிக்குமறைத்தல். செலவாவது - ஆயத்தைநீங்கித் தனியேசேறல். பயில்வாவது - எப்பொழுதும் ஓரிடத்தே நிற்றல். இவ்வேழினும் பாங்கி தலைவியை ஐயமுற் றோராய்தல். இவ்வேழினுள் இச்செய்யுள் தோற்றத்தாலாராய்கின்றது.—

முன்னுறவுணர்தல்.

தோற்றத்தாலாராய்தல்.

(இது வெளிப்படை)

வண்டலை யாயத் துடனயர்ந் தோவன்றி வண்டிமிர்பூந்
தண்டலை யாரத் தழைகள்கொய் தோதஞ்சை வாணன்வெற்பில்
புண்டலை வேலினுங் கண்சிவப் பாரப் பொலஞ்சுனைத்தேன்
கொண்டலை நீர்குடைந் தோவிவண் மேனி குழைந்ததுவே.

---

* அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. ௨௨.

** ஷை ஷை சூ. ௨௱.

இ - ள். இவள்மேனி குழைவுபட்டது, ஆயக்கூட்டத்துடன் வண்டலம் பாவையை வருந்திச் செய்தோ! அன்றி வண்டு ஆரவாரிக்கும் பூஞ்சோலையிடத்துச் சந்தனத்தழைகள் கொய்தோ! அன்றித் தஞ்சைவாணனது வெற்பிடத்துப் புண்செய்யும் தலையையுடைய வேலினும் கண்சிவப்புப்பொருந்தப் பொன்விளையப்பட்ட சுனையினிடத்து மலைத்தேன்வந்து கூடக் கொண்டலையலையப்பட்ட நீருட்குளித்தோ! யாதோ! அறிகின்றிலேன். எ - று.

வண்டலை - வண்டலம்பாவை. அயர்தல் - செய்தல். **அன்றி** - வினையெச்சக்குறிப்பு. இமிர்தல் - ஆரவாரித்தல். தண்டலை-சோலை. ஆரத்தழை-சந்தனத்தழை. பொலம் - பொன். குடைதல் - குளித்தல். குழைதல் - இளகுதல். ஓகாரங்களனைத்தும் ஐயத்தின்கண் வந்தன. **நெஞ்சம்**-முன்னிலையெச்சம். அவ்வகையதனு லையந்தீர்தல் - அவ்வேழு வகையினுலும் புணர்ச்சியுண்டென்று கருதித் தலைவியிடத் தையந்தீர்தல். (௬௩)

ஒழுக்கந்தா லையந்தீர்தல்.

(இது வெளிப்படை)

திளைக்குந் திரைமே லுனக்குமுன் றோன்றலிற் செம்பொன்வெ
ற்பை, வளைக்கும் பிரான்முடி வைகுத லாற்றஞ்சை வாணன்மண்
மேல், விளைக்கும் புகழ்போல் விளங்குத லாற்செக்கர் விண்பிறை
கார், தளைக்குங் குழற்றிரு வேதொழ வேதகுந் தன்மையதே.

இ - ள். காரைத்தன்னிடத்து நின்று நீங்காமற் றளைசெய்யுங்குழலையுடைய திருவே! நிரம்புங்கடலினிடத்து நினக்குமுன்னே தோன்றலானும், செம்பொன் மலையை வில்லாகவளைக்கும் சிவனது திருமுடியிடத்திருத்தலானும், தஞ்சைவாணன் புவியின்மேல் விளையச்செய்யும் புகழ்போல நாட்குநாள் மிக்காய் விளங்குதலானும், செவ்வானத்திடைத் தோன்றிய பிறை திங்கடோறுந் தொழுதல்போல் இன்றுந்தொழத்தகுந் தன்மையதாதலான், நீதொழுவாயாக. எ - று.

திளைத்தல் - நிறைதல். **திரை** - ஆகுபெயர். செம்பொன்வெற்பு - மேருமலை. பிரான் - சிவன். முடி - சடைமுடி. வைகுதல்-தங்குதல். செக்கர்விண் - செவ்வானம். கார் - கருநிறம்; மேகமெனினும் அமையும். தளைத்தல் - தடைசெய்தல்.

திரு இவ்வுருக்கொண்டுவந்து பிறந்தாளென்னும் கருத்தால் **திருவே** யென்றுகூறியது. இவள் கற்புக்கடன் பூண்டவளாதலான்,

‡ "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை." — என்னும் விதியினுன் தொழாளாயினளாகவே ஒழுக்கத்தினு லையந்தீர்ந்தவா றுயிற்று. (௬௪)

---

‡ திருக்குறள், ௬. ௫௫.

இப்பால் பாங்கி தலைவியைநோக்கிக் கண்சிவந்தும் இதழ்வெளுத்தும் நுதற்குறுவெயர் வரும்பியும் இருத்தலால், இவ்வேறுபாடு நினக்கெற்றினு லாயதென்று வினவுதலும், தலைவி சுனையாடிப்போந்தே னென்பதனுல் வந்ததென்று விடுத்தலும் இச்செய்யுளில் கவிகூறிற்றிலர்; யாதினு லெனின், அகப்பொருட் சூத்திரத்தில் இவ்விரண்டிற்குங் கிளவிகூறிற்றில ராதலானென்க. அவர் கிளவி கூருததற்குக் காரணம் என்னையெனின், சுருக்கநுலாதலிற் கூறிற்றிலர். விரிநூலிற்கூறிய துண்டோ வெனின், கூறியதுண்டு. என்னை,—தொல்காப்பியத்தில் ‡ 'நாற்றமுந் தோற்றமும்' என்னுஞ் சூத்திரத்தில் நச்சினர்க்கினியருரையில் தலைவி வேறுபாடு பாங்கி வினயதற்குச் செய்யுள்—

"தொய்யில் வனமுலையுந் தோளுங் கவினெய்தித்
தெய்வங் கமழுமா லெம்பாலு — மையுறுவல்
பொன்னங் கொடிமருங்குற் பூங்கயற் கண்ணினுய்க்
கென்னை யிதுவந்த வாறு."

இதற்குவிடை.—நின்னை நீங்கி மேதக்க சுனைகண்டு நெடுங்கால் மாடி னேன், அதனுலாயிற்றென்னும்.—

அதற்குப் பாங்கி மெய்யினற் பல வேறு
கவர்பொருள் சொல்லிநாடலின்
சுனைநயப் புரைத்தல்.

சுனைநயப்புரைத்தல் எ-து. மெய்யாயின் அதுகூறி யக்கூறும்பொரு ளிற் பலவேறு கவர்பொருள்சொல்லி ஆராய்தலின் சுனை நன்மையைக் கூறல்.

பூட்டிய வார்சிலை வீரரை வென்றெப் பொருப்பினுஞ்சீர்
தீட்டிய வாணன்றென் மாறையன் னீரிதழ்ச் செம்மையுமை
ஊட்டிய வாளின் கருமையுந் தான்கொண் டுமக்கிங்ஙனே
சூட்டிய வாறுநன் றுன்முல்லை மாலை சுனைப்புனலே

இ-ள். நாண் பூட்டிய வில்வீரரை வெற்றிகொண்டு குலமலைக ளெட்டினுங் கீர்த்தியைப்பொறித்த வாணனது தென்மாறை நாட்டை யொப்பீர்! நுமது இதழின்செம்மையும் மையூட்டியவாள்போன்றகண்ணின் கருமையுந் தாவென வாங்கிக்கொண்டு உமக்கிவ்வாறு கைம்மாருகச் சுனைப் புனலானது முல்லைமாலையைச்சூட்டியவாறு நன்று. எ-று.

'வார்பூட்டிய' எனமாறுக, வார்-நாண். பொருப்பு-குலமலை. சீர்-கீர்த்தி. தீட்டல்-எழுதல். ஊட்டல்-உட்கொளவைத்தல். வாளீ-ஆகுபெயர். ஆல்-அசை.

---

‡ தொல். பொருள். களவியல், சூ. ௨௩.

தலைவன் பாங்கற்கூட்டத்தில் தலைவியைப் பாங்கிற் கூட்டும்போது நின்காதலியோடு நீ வருகவெனக்கூறிக் கற்புடையவ ளென்றெண்ணி, கற்புடையமகளிர் முல்லைமாலை சூடுவது இயல்பாதலான், முல்லைமாலை சூட்டி விடுத்ததனால், தலைவியுந் தலைவன்சொல்லைக் கடவாளாதலால், தன் கற்புடைமை தன்னுயிர்ப்பாங்கி யறியவேண்டுமென்று கருதி, தலைவன் சூட்டிய முல்லைமாலையை மறையாது வந்தாளாதலால் அதுகண்டு கூறினா ளென்றுணர்க.

தலைவன் சூட்டினான் என்பதென்னை யெனின்,

§ "ஆணெடுந் தானையை யாற்றுக் குடிவென்ற கோன்பொதியில்
சேணெடுங் குன்றத் தருவிநின் சேவடி தோய்ந்ததில்லை
வாணெடுங் கண்ணுஞ் சிவப்பச்செவ் வாயும் விளர்ப்ப வண்டார்
தாணெடும் போதவை சூட்டவற் றேவத் தடஞ்சுனையே." — என்னும் இறையனார் அகப்பொருளில் ‡'முன்னுறவுணர்தல்' என்னுஞ்சூத்திர வுரையில் இக்கிளவிக்குப் 'போதவை சூட்டவற்றே வத்தடஞ்சுனை' என்றமையான் தலைவன்போது சூட்டினானென்றுணர்க.

முல்லைமாலை சூட்டிவந்ததைக்கண்டு வினாவினாளென்று தலைவிக்குத் தோன்றவும், இதழ் வெண்மைக்கும், கண் செம்மைக்கும் முல்லைமாலை யுவமையாகப் பாங்கி கருதிக்கவர்படுபொருளாய்ச் சொல்லவின்,மெய்யினாற் பல கவர்படுபொருள்சொல்லி நாடலாயிற்று. நாடல் - ஆராய்தல். இதழ் வெளுத்தல் அதரபானத்தாலும், கண்சிவத்தல் இறுக்கத்தழுவுதலானுந் தோன்றியதென் றுணர்க. (௬௫)

சுனைவியந்துரைத்தல்.

சுனைவியந்துரைத்தல் எ - து, அச்சுனை வியப்பை யானுமாடிக் காண்பேனென்று கூறல்.

மறலா யெதிர்த்த மறமன்னர் வேழ மலையெறிவேல்
திறலார் முருகன் செழுந்தஞ்சை வாணன்றென் மாறைவையை
அறலார் குழலாய் நுதற்குறு வேர்வு மழகுநின்போற்
பெறலா மெனிற்குடை வேனடி யேனும் பெருஞ்சுனையே

இ - ள். மதமயக்கமா யெதிர்த்த வீரமன்னரது யானையாகிய மலையை யெறியும் வேலால் முன்மலையை யெறிந்த வெற்றியார்ந்த முருகனையொக்குஞ் செழுந்தஞ்சைவாணனது தென்மாறைநாட்டில்வரும் வையையாற்றி லிருக்கும் அறல்போன்ற குழலையுடையாய்! நுதற்குறுவேர்வும் அழகும்

‡ இறையனார் அகப்பொருள், சூ. ௭.

கின்னைப்போற் பெறலாமெனின், அடியேனும் பெருஞ்சுனையை யாடிக் காண்பேன். எ - று.

மறல் - மயக்கம். மறமன்னர் - வீரமன்னர். திறல் - வெற்றி. அறல் - கருமணல். குடைதல் - நீராடுதல். 'பெறலாமெனில்' என்பது பெறுதற் கருமைதோன்ற நின்றது. தான்குற்றேவல்செய்யும் முறைமையால் 'அடியேன்' எனக் கூறினளென் றுணர்க. (கூகூ)

பொய்யினுற் பலவேறு கவர்பொருள் சொல்லி நாடலின் தகையணங்குறுத்தல்.

தகையணங்குறுத்தல் எ - து. தலைவி வேற்றமையினுல் அவளைத் தெய்வப்பெண்ணாக வலியுறுத்திக் கூறல்.

குவளை சிவத்துக் குமுதம் வெளுத்த குறையல்லவேல்
அவளை மறைத்துன்னைக் காட்டலு மாமலர்த் தேன்குதிக்கத்
தவளை குதிக்குந் தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
இவளை வரக்கண்டு நீயணங் கேபின் னெழுந்தருளே.

இ - ள். குவளையொக்குங் கண்சிவந்து, குமுதமொக்கும் வாய்வெளுத்த குறைபாடல்லவாயின், எங்கள் தலைவி யொருத்தியுண்டு, அவள் வடிவில் நின்னையொப்பவள், அவளை மறையவைத்து நின்னையவளென்று காட்டலாமென்று எல்லாருஞ்சொல்லுவர்; அலரினின்றுந் தேன்குதிக்கப் புதுநீர் வந்ததென்று தவளைகுதிக்கும் பெரியபொய்கை சூழ்ந்த தஞ்சைவாணன் வெற்பிலிருக்கு மலையணங்கே! எங்கள் தலைவிவருமளவும் இருந்து அவளை யொப்புக்கண்டு பின்னை நீயெழுந்தருள்வாய். எ - று.

‡ "கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே."—என்னும் மயங்கியற் சூத்திரத்தில் அன்னம்போல்வாளை அன்னம் என்றும், யானைப் போல்வானை யானை யென்றுங் கூறினமையான், இவ்விடத்துங் குவளை போன்ற கண்ணைக் குவளை யென்றும், குமுதம்போன்ற வாயைக் குமுதம் என்றும் ஆகுபெயராகக் கூறியவா றுணர்க.

'அலர்த்தேன்' என்புழி ஐந்தனுருபுதொக்கது. தடம்பொய்கை - பெரியபொய்கை. அணங்கு - தெய்வப்பெண்.

மனத்தில் தலைவிதா னென்றறிந்துவைத்து வாயினால் அணங்காகக் கூறினமையின், பொய்யினுற் பலவேறு கவர்பொருள்சொல்லி நாட

‡ தொல். சொல். வெற்றுமைமயங்கியல், சூ. கூச.

லாயிற்று. 'கவர்பொருள்' என்னாது 'பலவேறு கவர்பொருள்' என்றதென்னையெனின், ஒன்றல்லவெல்லாம் பலவாதல் தமிழ்நடை யாதலினென்றுணர்க. இவையிரண்டும் நாணநாட்டம். (௬௭)

நடுங்கநாட்டம்.

நடுங்கநாட்டம் எ - து. தலைவியை நடுங்கத்தக்கதாக நாடுதல்.

பால்போன் மொழிவஞ்சி யஞ்சிநின் றேனிந்தப் பார்முழுதும்
மால்போற் புரந்தவன் மாறை வரோதயன் வாணன்வென்றி
வேல்போற் சிவந்து நெறிமுறை கோடிய வேந்தன்வெய்ய
கோல்போற் கொடியன வாங்கொலை யானையின் கோடுகண்டே.

இ - ள். பால்போலும் மொழியையுடைய வஞ்சிக்கொம்புபோல்வாய்! இந்தப் பாருலகமுழுதையுந் திருமால்போ லிடையூறு நீக்கிக்காத்த மாறைநாட்டில் வரோதயனான வாணனது வென்றிவேல்போற் குருதியளைந்து சிவந்து நெறிமுறைமைவழுவிய வேந்தனது கொடுங்கோல்போல யார்க்கும் அச்சங்கொடுக்குங் கொடுமையவாகிய கொலைத்தொழில் செய்யும் யானையது கோட்டைக்கண்டு அஞ்சிநின்றேன். எ - று.

வஞ்சி - ஆகுபெயர். மால் - விண்டு. புரத்தல் - காத்தல். கோடிய - வழுவிய. கோடு - கொம்பு.

"நாணவு நடுங்கவு நாடாடோழி
காணுங் காலைத் தலைமக டேத்து." — என்பதனால் நாண நாட்டமும் நடுங்க நாட்டமுங்கூறியது அகப்பொருட்சிதைவாய்ப்பெருந்திணைப் பாற்படும். அன்றியும் பாங்கி இவ்வாறு கூறவே, தலைவி குறிப்பறியாது கூறினளுமாம், அவமதித்தாளுமாம், ஆசார மில்லாது கூறினளுமாம்; மற்று இக்குற்றமெல்லாம் நீங்குமாறும், அகப்பொருட் சிதைவு வாராமற் போற்றுமாறும். என்னையெனின், நாணநாட்டத் தின்கண் தலைவிக்குயிர்ப் பாங்கி யாதலின், இவளுள்ளமே யவளுள்ள மாதலின், புணர்ச்சியுண்மை யுண்டென்பதறிந்து கூறுகின்றாளென்பது தலைவியறியும். அறிந்ததலைவி பாங்கியுடன் கூறாத தென்னையெனின், இவள்பெருநாணின ளாதலான் கூறலாகாதென் றிருந்தாள். தன்னுடன் உண்மைகூறவில்லை, தானுண்மைக் கயலாயினேன், அவ்வாறு அயலாகாது உடம்பட்டிருக்கத் தலைவியாகத் தன்னோடு கூறவேண்டுமென்பது கருதி, பாங்கி யாராய்ச்சிசெய்த காரியமாதலான், நாணநாட்டத்தாற் குற்றமின்மையறிக.

இனி நடுங்க நாட்டம் யானைக்கண்டஞ்சினே னென்றவழி தலைவி நடுங்காம லிருந்தவழி யென்னையெனின்,

‡ "மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொரு ணாட்டத் தானும்" — என்னும் சூத்திரத்தில் 'வழிநிலைபிழையாது' என்பதற்கு **நச்சினார்க்கினியர்** உரையில் பாங்கி குற்றேவல் முறைமை தப்பாது, பெருநாணினள், பேரச்சத்தாள், தலைவி யென்பதறிந்து, தானும் இறந்துபடாமற் கூறத்தகும் வார்த்தை கூறுமென் றுரைகூறினாராதலானென்பது. நடுங்கநாடிக் கூறும்போதும் பாங்கி, எம் பெருமாட்டி கவற்சியுறும்,கவற்சி யுற்றபோதே யிறந்துபடினும் படுமென்ப தறிந்து, முகமலர்ச்சியாய் நகையாடுதல் போன்றுங் கூறுமாதலால், தலைவி இவள்முகக்குறிப்பு நோக்கியும், கவற்சியில்லாமை நோக்கியும் பொய்யென் றறிந்திருந்தா ளென்க. அன்றியும் சான்றோர் செய்யுட்களிற் பெரும்பாலும் பயின்றுவருதலானும் குற்றமின்றெனை உணர்க. குற்றமாயின் சான்றோர் செய்யுட்க ளோதாரெனவுணர்க.

தொல்காப்பியச் சூத்திரத்தும் 'வழிநிலைபிழையாது' என்பதனால் வழுவமைதிபெற்றும். திருக்கோவையாரில் நாணநாட்டம் நடுங்க நாட்டத்தைப் பெருந்திணைப்பாற்படும் என்று **பேராசிரியர்** உரைகூறினாரெனின், **மாறுகோளக்கூறல்** என்னுங் குற்றமாம். என்னை, —

* "அளவையி லின்பத் தைந்திணை மருங்கிற்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்." — என்னும் அகப்பொருளினும், a‡"அன்பி னைந்திணைக் களவெனப் படுவது" — என்னும் **இறையனார்** அகப்பொருளினும்,

b‡ "இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக்கூட்டம்" —

என்பதனான் தொல்காப்பியத்தினும், மற்றும் பிற நூல்களினும் ஐந்திணைகளவென்று கூறுவதல்லது பெருந்திணையை அகப்பொருளிற் கூறுவதொருநூலினு மில்லை.

பெருந்திணையாவது

"ஒப்பில் கூட்டமு மூத்தோர் முயக்கமும்
செப்பிய வகப்பொருட் சிதைவும் பெருந்திணை." — என்னுஞ் சூத்திரவிதியாற்பெருந்திணைப்பாற் படுமென்றல் பொருந்தாது.

---

‡ தொல். பொருள். களவியல், சூ. ௨௩.
* அகப்பொருள்விளக்கம், அகத்திணையியல், சூ. ௨௯.
a‡ இறையனார் அகப்பொருள், சூ. ௧.
b‡ தொல். பொருள். களவியல், சூ. ௧.

"அகத்திற் சிதைந்தது புறத்தின் பாற்படும்" —
* "மடலே றுதலொடு விடைதழா லென்றா
குற்றிசை தன்னொடு குறுங்கலி யென்றா
சுரநடை தன்னொடு முதுபாலை யென்றா
தாபத நிலையொடு தபுதார நிலையெனப்
புகன்றவை யியற்பெயர் பொருந்தா வாயி
னகன்ற வகப்புறப் பெருந்திணைத் தாகும்.' — என்பதனால்

நாணநாட்டம் நடுங்கநாட்டம் இதனோ டொப்பதன்றி வழுவமைதியென் றுணர்க.

இவற்றுள் முன்னையதொன்றும் மெய்யினாற்சொல்லியது, பின்னைய மூன்றும் பொய்யினாற்சொல்லியது. (கஅ)

இந்துணையும் மூன்றநாட் செய்தியென வுணர்க.

முன்னுறவுணர்தல் - முற்றும்.

குறையுறவுணர்தல்.

பேட்டவாயில் பெற்றிரவுவலியுறுத்தல்.

பெட்டவாயில் பெற்றிரவு வலியுறுத்தல் எ - து. இயற்கைப்புணர்ச் சிப்பின்னர்ப் பிரிவுழிக்கலங்கலின் வாயில் பெற்றுய்தலென ஆண்டு விரும் பப்பட்ட பாங்கியைத் தூதாகப்பெற்றுக் குறையிரத்தலை வலியுறுத்திக் கூறல்.

பொருமணி வெண்டிரைப் பைங்கடல் வங்கம் பொருந்திமுன்பு
தருமணி பின்பெற் றணிபவர் போற்சென்று சார்ந்திரந்து
பருமணி நன்கலப் பாங்கியை நீங்கியப் பாவையைநாம்
மருமணி வண்டுறை தார்வாணன் மாறை மருவுதுமே.

இ - ள். வெண்டிரை முத்துகளைப் பொரப்பட்ட பசியகடலிடத்து மரக்கலத்தை முன்புபொருந்திப் பின் அக்கடல்தரப்பட்ட மணிகளைப் பூண்பவர்போல, நாம்போய்ப் பரியமணிகளைக் குயிற்றிய நல்ல அணிகளை யணிந்த பாங்கியைச்சார்ந்து நமது குறையையிரந்து, அவனேர்ந்தபின் பாங்கியைநீங்கி, அப்பாவைபோல்வாளை மணம்பொருந்திய கரியவண்டுறை யப்பட்ட தாரணிந்த வாணன் தென்மாறைநாட்டுக் கூடுதும், நெஞ்சமே! அஞ்சல். எ - று.

'வெண்டிரைமணிபொரு' எனமாறுக. வெண்டிரை - வெண்மை நிறம்பொருந்திய அலை. மணி - முத்து. வங்கம் - மரக்கலம். நன்கலம் - நல்ல வணி. 'நாஞ்சென்று' எனவும், 'பாங்கியைச்சார்ந்து' எனவும் மாறுக.

---

* அகப்பொருள்விளக்கம், ஒழிபியல், சூ. ருரு.

மரு - மணம். மணிவண்டு - கருவண்டு. தார் - மாலை. நெஞ்சம் - முன்னிலை யெச்சம். மாறைநாடு கடலாகவும், பாங்கி மரக்கலமாகவும், தான் மரக்கலநாயகனாகவும், தலைவி அக்கடலிடத்திருக்கும் மணியாகவும் உவமித்ததனால் இதுதொழிலுவமம்.

‡"நிரனிறை சுண்ண மடிமறி மொழிமாற்
றவைநான் கென்ப மொழிபுணரியல்பே." — என்னுஞ் சூத்திர

விதியால் மொழிகள் மாறிநின்றன. (அகூ)

ஊர்வினாதல்.

ஊர்வினாதல் எ - து. தலைவன் கண்ணியுந் தழையுமேந்திக் குறையுற்றவன்போல வந்து நின்று ஊர்வினாதல்.

புதியேன் மிகவிப் புனத்திற்கி யான்றனிப் போந்தனனும்
பதியேது செல்லும் படிசொல்லு வீர்படி மேற்படிந்த
மதியேய் சுதைமதில் சூழ்தஞ்சை வாணன்றென் மாறைவையை
நதியேய் சுழிநிக ரும்பழி தீருந்தி நல்லவரே.

இ - ள். புவியின்மேற் படிந்த மதியை யொப்பாகிய சுதையினால் விளங்கிய மதில்சூழ்ந்த தஞ்சைவாணனது தென்மாறைநாட்டின்கண் வருகின்ற வையைநதியிற்பொருந்திய சுழியையொக்குங் குற்றந்தீர்ந்தவுந்தியையுடையமடவாரே! யான் இப்புனத்திற்கு மிகவும் புதியேன், ஓர்காலும் வந்தறியேன், இப்போது தனியாகவந்தேன், நீரிருக்கும்பதியாது? யான் செல்லும்படிக்குச் சொல்லுவீர். எ - று.

படி-புவி. மதியேய்-ஒப்பு. சுதை - வெண்சாந்து. ஏய்-பொருந்துதல். உந்தி - கொப்பூழ். நல்லவர் - மடவார். (௭0)

பெயர்வினாதல்.

(இது வெளிப்படை)

கரைத்தாவி யுந்திய காவிரி வைகிய காலத்தினுந்
தரைத்தாரு வன்னசெங் தண்ணளி வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
வரைத்தாழ் சிலம்பினும் வாழ்பதி யீதென்று வஞ்சியன்னீர்
உரைத்தா லிழிவ துண் டேற்பெய ரேனு முரைமின்களே.

இ - ள். கரையைத்தாவித் திரையையெறிந்த காவிரிவற்றிய காலத்தினும் பூமியின்கண் கற்பகத்தருவையொத்த செவ்விய அருளையுடைய வாணனது இனிமைபொருந்திய தஞ்சையைச்சூழ்ந்த மலைகள்பணியப்பட்ட பொதியவெற்பில் நம்முடைய வாழ்வாகிய பதியிதென்றுரைத்தால் உமக்கிகழ்ச்சி வருவதுண்டேல், வஞ்சிக்கொம்புபோல்வீர்! பெயராயினும் உரைமின்கள். எ - று.

---

‡ தொல், சொல். எச்சவியல், சூ. அ

தாவுதல் - கடத்தல். உந்தல் - எறிதல். காவிரி - காவேரி. வைகல் - வற்றல். தரை - புவி. தாரு - கற்பகத்தரு. செந்தண்ணளி - செவ்விய அருள். தமிழ் - இனிமை. வரை - மலை; சாதியொருமை. தாழ்தல் - பணிதல். சிலம்பு - ஈண்டு பொதியவெற்பு. இழிவது - குறைவருவது.

'வரைத்தாழ் சிலம்பின்' என்புழி ஐகாரவீற்றுப் பெயராகலான் 'வரைதாழ்சிலம்பு' என இயல்பாய் முடியாது ஒற்றுமிக்கவா றென்னை யெனின்,

‡ "வேற்றுமை யல்வழி இ ஐ யென்னு
மீற்றுப் பெயர்க்கிளவி மூவகை நிலைய
வவைதா - மியல்பா குனவும் வல்லெழுத்து மிகுனவு
முறழா குனவு மென்மனார் புலவர்.—என்னுஞ்சூத்திரவிதியால் இகர ஐகாரவீற்றுப் பதங்கள் இயல்பாய்முடிவனவும், வல்லெழுத்து முடிவனவும், உறழ்வாய் முடிவனவுமாகிய மூவகை முடிபினுள் திணை தறிது, திணைக்தறிது என்றாற்போல, வரைதாழ், வரைத்தாழ் என உறழ்ச்சி முடிபாயினவென் றுணர்க. (எக)

கேடுதிவினுதல்.

கெடுதிவினுதல் எ - து கெட்டபொருளை வினவுதல்.

தண்பட்ட மேவும் வயற்றஞ்சை வாணன் றமிழ்ச்சிலம்பில்
பண்பட்ட தேமொழிப் பாவையன் னீர்பனை பட்டகையும்
மண்பட்ட கோடு மதம்பட்ட வாயும் வடிக்கணைதோய்
புண்பட்ட மேனியு மாய்வந்த தோவொரு போர்க்களிறே.

இ - ள். தண்ணியவோடையும் பொருந்திய வயலுஞ்சூழ்ந்த தஞ்சைவாணனது பொதிய வெற்பிடத்துப் பண்ணுண்டாகப்பட்ட இனிய மொழியையுடைய பாவைபோல்வீர்! பனைபோலுண்டாகியகையும், தன் னிழலைச் சளித்துப் பாய்தலான் மண்பட்ட கோடும், கரடத்தானத்தி விருந்து வடிந்தொழுகும் மதம்பட்டவாயும், கூரிய என்கைக்கணை மூழ்கலால் புண்பட்டவுடலுமாய் ஒருபோர்க்களிறு நும்புனத்தயலே வந்ததோ? கண்டீரேல் சொல்லுவீராக. எ - று.

பட்டம் - ஓடை. பட்டமும் வயலும் என உம்மைத்தொகை. மேவுதல் - பொருந்துதல். தமிழ்ச்சிலம்பு - பொதியமலை. பண்-இசை. படுதல் - உண்டாதல். தேம் - இனிமை. பாவை - சித்திரப்பாவை. பனைபட்டகை - பனைபோலுண்டாகியகை; உவமைத்தொகை. வடி-வடித்தல். களிறு - யானை. உம்மை-எண்ணின்கண்வந்தன. கெடுதிவினுதல், வேழம்வினுதல், பன்றிவினுதல், நாய்வினுதல், இனையவினுதல் எனப்பலவுமுள; அவற்றுள் இது வேழம்வினுதல். (எஉ)

‡ தொல். எழு. தொகைமரபு, சூ. கக.

ஒழிந்ததுவினுதல்.

ஒழிந்ததுவினுதல் எ-து. இவன் வினையதற்கு விடையின்மையால், நீர் பேசாதொழிந்த தென்னெனவினுதல்.

வனமார் குடிஞைப் பகைக்குர லாமென வாணன்றஞ்சைப்
புனமார் குளிரிப் புடைப்பொலி யாற்கிள்ளை போயினமீண்
டினமா மெனவந்திவ் வேனலெல்லாம் வவ்வு மென்பதற்கோ
கனமா நறுங்குழ லீர்மொழி யாதொழி காரணமே.

இ-ள். வாணனது தஞ்சைநாட்டில் முகில்போன்ற கருமையாகிய நறியகுழலீர்! மொழியாதொழிந்த காரணம் காட்டிலார்ந்த கூகைக்குப் பகையாகிய காக்கைக் குரலாமென புனத்திற் பொருந்திய குளிரியென்னுங்கருவியை நுங்கையாற் புடைத்திடுமோசையால் வெருண்டுபோயின கிளிகளெல்லாம்; நீர்வாய்திறந்து மொழியின், நமதுகுரலென் றறியாது கிளிக்குரலென் றெண்ணி மீண்டு வந்து, இவ்வேனற் கதிரையெல்லாங் கவருமென்பதனுலோ? சொல்லுவீர். எ-று.

'வாணன் தஞ்சைக்கனமா நறுங்குழலீர்' எனவும், 'பகைக்குரலா மெனப் புனமார்குளிரி' எனவும், 'போயினகிள்ளை' எனவும் மாறிக் கொள்க. என்னை,—

‡ "மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய
முன்னும் பின்னுங் கொள்வழிக் கொளாஅல்." — என்னுஞ்

சூத்திரவிதியால் மொழிமாற்றிப் பொருளுரைத்துக்கொள்க.

'நல்லவரோசொல்லுவீர்' என்றும், 'வஞ்சியன்னீருரை மின்கள்' என்றும், 'பாவையன்னீர்' என்றும், 'கனமாநறுங்குழலீர்' என்றும், வினுதல் நான்கினும் பன்மையாற்கூறிய சொற்கள் பாங்கி யொருத்தியையே ‡‡ "ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவி"—என்னுஞ் சூத்திரவிதியாற் கூறிய உயர்சொற்கிளவியென் றுணர்க. தலைவியுங்கூட இருந்தாளெனில் வருங்குற்றமென்னவெனின், குற்றமுண்டு. என்னை,—‡'இருவருமுளவழி யவன்வரவுணர்தல்' என மேலே கூறப்படுதலின், இங்ஙனம் இருவரும் உடனிருந்தாரொன்று கூறலாகாவென வுணர்க.

வனம் - காடு. ஆர்தல் - பொருந்தல். குடிஞை - கூகை. பகை - காக்கை. குளிரி - தினைப்புனத்திற் கிளியோட்டவோர் மூங்கிலில் வீணை போற்கட்டித் தெறிக்குங்கருவி.

---

‡ தொல். சொல். எச்சவியல், சூ. கசு.
‡‡ ஷை ஷை கிளவியாக்கம், சூ. உஎ.

‡ "தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங் கிளிகடி மரபின்." — என்னும் பத்துப்பாட்டில் 'குளிரும்' என்பதற்கு **நச்சினார்க்கினியர்** கூறிய வுரையிற் கண்டுகொள்க. **துளிர்** எனினும், **துளிரி** எனினுமொக்கும்.

புடைத்தல் - விரலாற்றெறித்தல். கிள்ளை - கிளியெனல் ஆகுபெயர். கனம் - மூங்கில். மா - கருமை. **கனங்குழல்** என்புழி உவமைத்தொகை. 'கனமாகறுங்குழல்' பாரமாகிய நறிய குழலெனினும் அமையும் என்பதற்கு வேற்றுமை மயக்கம். ஓகாரம் - வினா. (எரு)

யாரோ யிவர்மனத்தெண்ணம் யாதெனத் தேர்தல்.

யாரோ யிவர்மனத் தெண்ணம் யாதெனத் தேர்தல் எ - து. இவ்வாறு கன்னியுந் தழையுமேந்தி ஊர்பெயர் கெடுதியோ டொழிந்தவும் வினவி நின்றவர்யாரோ! இவர்மனத்தெண்ணம் யாதோ! வெனப்பாங்கி தன் மனத்தில் ஆராய்ச்சிசெய்தல்.

தணையார வண்புகழ் தேக்கிய வாணன் றமிழ்த் தஞ்சைசூழ்
வரையாது நம்பதி யாதுநும் பேரென்பர் வார்துளிக்கார்
புரையானை யம்பொடு போந்ததுண் டோவென்பர் பூங்கொடியீர்
உரையாத தென்னென்ப ராலென்கொ லோவிவ ருட்கொண்டதே

இ - ள். தணைநிறைய வளவியபுகழை நிறைத்த வாணனது தமிழ்த் தஞ்சைசூழ்ந்த வரையிடத்து நும்முடைய பதியாது? நும்முடைய பெயர் யாது? என்றுஞ் சொல்லுவர்; அல்லாமலும், நெடிய துளியைச் சொரியும் மேகத்தையொக்கும் யானையென் கையம்போடு வந்ததுண்டோ? என்றுஞ் சொல்லுவர்; அன்றியும், பூங்கொடிபோல்வீர்! யாதும் உரையாததென்? என்றுஞ் சொல்லுவர்; ஆதலால், இவர்யாரோ! இவருட்கொண்ட எண்ணமென்கொலோ! அறிகின்றிலேன்! எ - று.

தணை - பூவுலகம். ஆர் - நிறைய. வண்புகழ் - வளவியபுகழ். தேக்கல் - நிறைத்தல். தமிழ் - இனிமை. வரை - மலை. 'பதியாது,' 'பேர் யாது' எனமாறுக. வார் - நெடுமை. துளிக்கார் - துளிசொரியுங்கார். **புரை** - உவமவுருபு.

'போந்தது' - 'வந்ததோ வொருபோர்க் களிறே' என்று தலைவன் முன் வினவிய சொல்லையே பாங்கி மீண்டு 'யானை யம்பொடு போந்ததுண்டோ' என்று அப்பொருளையே யெடுத்துக் கூறினமையால், 'வந்தது' என்னும் பெயராயினவாறு காண்க. அன்றியும், 'புதியேன்றகவிப் புனத்திற் கியான்றனி போந்தனன்' என்பதனானு முணர்க.

பூங்கொடியீர் - ஆகுபெயர். உம்மை - இறந்ததுதழீஇய வெச்சவும்மை விகாரத்திற் றொக்கது. **கொல்** - ஐயம். ஓகாரம் - அசை. உட்கொண்டது - உட்கொண்ட வெண்ணம். (எச)

குறையுறவுணர்தல் - முற்றும்.

---

‡ குறிஞ்சிப்பாட்டு.

இருவரு முள்வழி யவன்வர வுணர்தல்.

எண்ணந் தெரிதல்.

(இது வெளிப்படை.)

யாரோ யிவரென் றறிகின்றி லேமெதிர்ந் தாரைவென்று
வாரோய் கழற்புனை வாணன்றென் மாறை வரையுறைவீர்
ஊரோ தெனமுன் வினவிப்பின் வேறொன் றுரைப்பதெல்லாம்
நேரோ யிவர்பொருட் டாலென்று தோன்றுமென் னெஞ்சினுக்கே.

இ - ள். கன்னியுக் தழையுமேந்திக் குறையுற்றார்போல் வினவிய இவர் யாரென் றறிகின்றிலேம்! போர்க்களத்தி லெதிர்ந்தாரைவென்று கயிறு பொருந்திய கழலைப்புனைந்த வாணன் தென்மாறைநாட்டில் வந்த இவர் நம்மைநோக்கி வரையுறைவீர், நும தூரெதுவென முன் வினவிநின்று பின் வேறொன்றாகச் சொல்லும் வார்த்தையெல்லாம் ஆராய்ந்தெண்ணில், செவ்வனே இவள்பொருட்டென்று எனனெஞ்சினுக்குத்தோன்றும், இதற் கையமில்லை. எ - று.

யாரோ - ஏகாரம் ஈற்றசை. வார் - கயிறு. எய்தல் - பொருந்தல். கழல் - வீரக்கழல். புனைதல் - தரித்தல். நேர் - செவ்வை. ஆல் - அசை.

தலைவன் கையுறையேந்திவருதல்.

தலைவன் கையுறை யேந்திவருதல் எ - து. தலைவியும் பாங்கியுஞ் சேர்ந் திருப்பது கண்டு தலைவன் கையுறை யேந்திவருதல்.

தண்டா மரைமலர்ப் பொன்னையும் பார்மங்கை தன்னையும்போல்
வண்டார் குழன்மட வார்மணந் தார்சென்று வாணன்றஞ்சை
நுண்டா தணிபொங்கர் நீழலின் கீழந் நுடங்கிடையார்க்
கண்டா தரவையெல் லாஞ்சொல்ல வேநல்ல காலமிதே.

இ - ள். வாணனது தஞ்சைசூழ்ந்த நுண்ணிய தாதுகள் பொருந்திய சோலைநிழற்றண்ணிய தாமரைமலரி லிருக்குந் திருமகளும், பார்மங்கை யாகிய நிலமகளும்போல, வண்டார்குழலன மடவாராகிய தலைவியும் பாங் கியுஞ் சேர்ந்திருந்தா ராதலால், நாம்போய் அந் நுடங்கிடையாரைக்கண்டு நமது காதலெல்லாஞ்சொல்ல இது நல்லசெவ்வி. எ - று.

பொன் - திருமகள். பார்மங்கை - நிலமகள். மணத்தல் - சேர்தல். தாது - பராகம். பொங்கர் - சோலை. நுடங்கல் - ஒசிதல். 'இடையார்க் கண்டு' என்புழி இரண்டனுருபு தொக்கது. உம்மை - எண்ணும்மை. ஏகாரம் - ஈற்றசை. காலம் - செவ்வி. செவ்வி, பதம், அமையம், காலம் என்பன ஒருபொருட்கிளவி. (௭௬)

தலைவனவ்வகை வினுதல்.

தலைவ னவ்வகை வினுதல் எ-து. தலைவன் முன் கெடுதி வினுதல் போல மீண்டு கலைவந்ததோ வென்று வினுதல்.

வல்லா ரிளங்கொங்கை வஞ்சியன் னீர்தஞ்சை வாணனைக்கண்
டொல்லார் களத்தி னுடைந்தது போல வொருகலைபோர்
வில்லார் கணைதப்ப மெய்சோர்ந் தினம்விட்டு வெய்துயிர்த்துப்
புல்லார் வதுமின்றி யேவந்த தோகம் புனத்தயலே.

இ-ள். சூதுபோன்ற இளங் கொங்கையையுடைய வஞ்சிக்கொம்பு போல்வீர்! தஞ்சைவாணனைக்கண்டு பகைவர் போர்க்களத்தில் உடைந்தோரோடியது போலப் போர்செய்யும் எனது கையில் வில்லார்ந்த கணை தப்ப ஒரு கலைமான் மெய்சோர்ந்து இனத்தைப்பிரிந்து பெருமூச்செறிந்து புல்லருந்தலு மின்றி நும் புனத்தயலிலே வந்ததோ? கண்டீராயிற் சொல்லுவீர். எ-று.

வல் - சூது. ஆர் - ஒப்பு. ஒல்லார் - பகைவர். களம் - போர்க்களம். உடைதல் - படைதட்டழிதல். சோர்தல் - மயங்கல். விடுதல் - பிரிதல். வெய்துயிர்த்தல் - பெருமூச்செறிதல். ஆர்தல் - அருந்தல். வினையெச்ச வடுக்குகள் 'வந்ததோ' என்னும் வினுப்பொருண்மை வினைகொண்டு முடிந்தது. ஓகாரம் - வினு. (எஎ)

எதிர்மொழிகொடுத்தல்.

(இது வெளிப்படை)

வாக்குந் திறனு மதனையொப் பீர்தஞ்சை வாணன்மஞ்சு
தேக்குங் குடுமிச் சிறுமலைக் கேதிரி கோட்டிரலை
நோக்குஞ் சாமுங் குருதியுஞ் சோரக் கொடிச்சியரோங்
காக்கும் புனமருங் கேதனி யேவரக் கண்டிலமே.

இ-ள். மெய்த்திருத்தத்தினும் வெற்றியினும் மதனைப்போல்வீர்! தஞ்சைவாணனது முகில் நிறையும் உச்சியையுடைய சிறுமலையிடத்துத் திரிந்ததுபோலிருக்கின்ற கொம்பையுடைய கலையும், யானைகட்குத் தலைமையாகிய குஞ்சரமும், குருதியொழுக்க கொடிச்சியராகிய யாங்கள் காக்கும் புனப்பக்கத்தே தனியேவரக் கண்டிலேம். எ-று.

வாக்குத்திருத்தம் - மெய்; அவாய்நிலையான்வந்தது. ‡ "வாக்கணங் கார்மணி வீணை வல்லார்க்கும்" என்னும் கேமசரியா ரிலம்பகத்துப் பாட்டில் வாக்குத்திருத்தமென்றுணர்க.

---

‡ சிந்தாமணி, கேமசரியாரிலம்பகம், செ. கூஉ.

திறல் - வெற்றி. மஞ்சு - மேகம். தேக்கும் - நிறையும். குடுமி - உச்சி. சிறுமலை - மலைப்பெயர். 'சிறுமலைக்கு' என்புழி வேற்றுமை மயக்கம். திரிதல் - முறுக்குதல். கோடு - கொம்பு. இரலை - கலைமான். குஞ்சரம் - யானை. குருதி - இரத்தம். சோர்தல் - ஒழுகுதல். கொடிச்சியர் - குறத்தியர். இரலைக்கு உம்மை கொடாது குஞ்சரத்திற்கு உம்மை கொடுத்த தென்னையெனின்,

‡ "எஞ்சு பொருட்கிளவி செஞ்சொ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்." — என்னும் விதியாற் கொள்க. குருதியும் என்னும் உம்மை அசைநிலை. (௭௪)

இறைவனை நகுதல்.

இறைவனை நகுதல் எ - து. தலைவன் அப்பாற் சென்றானாகப் பாங்கி தலைவியை நோக்கி அசைஇயாடி நகாநிற்றல்.

மைவா ளிலங்குகண் மங்கைநல் லாய்தஞ்சை வாணன்வெற்பில்
இவ்வாளி மொய்ம்பரின் றெய்தமெய்ம் மானிள மாந்தளிரின்
செவ்வாளி யுங்கொண்டு சேட்சென்ற தாலன்று சீதைகொண்கன்
கைவாளி யுங்கொண்டு போனபொய்ம் மானினுங் கள்ளத்ததே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பிடத்து மையெழுதிய வாள்போ லிலங்கும் கண்ணையுடைய மங்கைப்பருவத்து நல்லாய்! இந்த வாளி போலும் வலியையுடையார் இப்போதெய்த மெய்யாகிய மான் இளமாந்தளிராகிய சிவந்த வாளியையுங் கொண்டு சேய்மைக்கண் சென்றதாதலால், பண்டைநாளில் இராமனது வாளியையுங் கொண்டுபோன பொய்யாகிய மானினுங் கள்ளத்தையுடையது. எ - று.

'பொன்மான்' என்று பாடமோதுவாருமுளர். இவனெய்த மெய் மானென்று கூறவே அம்மான் பொய்மானென்றே கூறவேண்டு மாதலால் அது பாடமன்மை யுணர்க. 'மைவா ளிலங்குகண்' உவமைத்தொகை. 'ஆளி மொய்ம்பர்' என்பதுமது. மொய்ம்பு - வலி. 'இளமாந் தளிரின் செவ்வாளி' என்றது கையில் அம்பின்றித் தளிர் பிடித்து நிற்றலின் கையாடி கூறியது. சேண் - சேய்மை. அன்று - பண்டைக்காலம். சீதை கொண்கன் - இராமன். கைவாளி - கையம்பு. உம்மை - சிறப்பும்மை. (௭௫)

பாங்கிமதியின் அவரவர் மனக்கருத்துணர்தல்.

பாங்கிமதியின் அவரவர் மனக்கருத் துணர்தல் எ - து. பாங்கி தன்னறிவினின் தலைவன் தலைவியென்றிருவரது மனக்குறிப்பை யாராய்ந்து கூறல்.

---

‡ தொல். சொல். இடையியல், சூ. ௩௬.

இறைவியோன் இறைவிதன்மை யியம்பல்.

(இது வெளிப்படை.) தன்மை - இலக்கணம்.

தாளிணை மாந்தளி ரல்குல்பொற் றேரிடை சங்கைகொங்கை
கோளிணை கோலக் குரும்பைகை காந்தள் கொடிக்கரும்பார்
தோளிணை வேய்முகந் திங்கள்செவ் வாயிதழ் தொண்டையுண்கண்
வாளிணை வார்குழ லாய்வாணன் மாறையெம் மன்னுயிர்க்கே.

இ - ள். வார்குழலாய்! வாணனது மாறைநாட்டிலிருக்கும் எம் மன்னுயிர்போல்வாட்கு இலக்கணம்,—தாளிணை, மாவினது தளிர்; அல்குல், பொன்னி னலங்கரித்த தேர்; இடை, உண்டு இல்லையென்னுஞ் சங்கை; கொங்கை, கொத்திலிரண்டிணைந்து அழகார்ந்த குரும்பை; கை, காந்தள்; பூங்கொடியுங் கரும்புங் குங்குமம் வெளுத்தாலார்ந்த தோளிணை, வேய்; முகம், திங்கள்; சிவந்த வாயிதழ், கோவைக்கனி; மையுண்டகண், வாளிணை; நீயறிவாயாக. எ - று.

சங்கை - ஐயம். † "கோள்கொத்துக் கோட்டெங்கின் குலைவாழை" என்புழி கோள்கொத்தினை யுணர்த்தியவாறுணர்க. அன்றியும், †† "கோள்வண் கோட்பலவின்" என்புழியும் கோள்கொத்தினையுணர்த்தியவாறுணர்க. கோலம் - அழகு. கொடி - வல்லி. 'கொடிக்கரும்பு' என்புழி உம்மைத்தொகை. தொண்டை - கொவ்வைக்கனி. மன்னுயிர் - ஆகுபெயர். (அ௫)

பாங்கி தலைவியருமைசாற்றல்.

பாங்கி தலைவியருமை சாற்றல் எ - து. பாங்கி தலைவியை யறியாளாக்கிக் கூறல்.

புகழார் வரையெம் புரவலன் காதற் புதல்வியைநீர்
இகழா வெளியளென் றெண்ணப்பெ றீரெமக் கென்றும்வண்மை
திகழா பரணன் செழுந்தஞ்சை வாணன் சிலம்பினுள்ளீர்
அகழார் கலியுல கிற்புல னான வணங்கவளே.

இ - ள். எமக்கென்ஞான்றும் வளமையொளிரும் ஆபரணம்போன்ற செழுந்தஞ்சை வாணனது சிலம்பிலிருப்பீர்! புகழ் நிறைந்த வரைக்கு இறைவனாகிய எம் புரவலர்க்குக் காதற்புதல்வியாயுள்ளாளை யிகழ்ந்தெளியளென் றெண்ணப் பெறுந்தகுதி யுடையீரல்லீர்; அவள் சகரரால் அகழப்பட்ட கடல்சூழ்ந்த வுலகில் அறிவுருவான தெய்வப்பெண். எ - று.

வரை - மலை. புரவலன் - அரசன். ஆர்கலி - கடல். (அ௬)

---

† பட்டினப்பாலை. †† மலைபடுகடாம்.

தலைவன் இன்றியமையாமை யியம்பல்.

தலைவன் இன்றியமையாமை யியம்பல் எ-து. இன்றியமையாமை ஓர் சொல்.முடிந்தபொருளாய் துணிபுபற்றியசொல். என்னை,—

‡ "நீரின் றமையா துலகெனின் யாரியார்க்கும்
வானின் றமையா தொழுக்கு." — என்பதுபோலத் தலைவி இன்றியமையாமை கூறல்.

வனைந்தா லனகொங்கை மாதுரு வாய்த்தஞ்சை வாணன்வெற்பில்
புனைந்தா லனைய புனத்தயல் வாய்வண்டு போதகத்தேன்
நனைந்தா லனையவென் னல்வினை தான்வந்து நண்ணிற்றென்று
நினைந்தா லணங்கனை யாய்தமி யேனுயிர் நிற்கின்றதே.

இ-ள். அணங்குபோல்வாய்! தஞ்சைவாணனது வெற்பிடத்து அலங்கரித்தாற்போலும் புனத்தின்பக்கத்தில் என் நல்வினைதான் கைவல்லார் கையினாற் செய்துவைத்தாற்போலுங் கொங்கையையுடைய மாதுரு வாய்வந்து பொருந்திற்றென்று நீ நினைத்தால்,போதகத்திலிருக்குந் தேனில் வண்டு நனைந்தாலொத்த அத்தலைவி யின்பத்தின் மூழ்குந் தமியேனுயிர் நிற்கின்றது; நினையாவிடின் நில்லாதென் றறிவாய். எ-று.

போது தலைவியாகவும்,தேன் இன்பமாகவும், வண்டு தானாகவும் உவமித்தவதனான் தலைவியின்பத்து மூழ்குமென்று வருவிக்கப்பட்டது.

வனைதல் - செய்தல். புனைதல் - அலங்கரித்தல். அயல் - பக்கம். நண்ணல் - பொருந்தல். அணங்கு - தெய்வப்பெண். 'நினையாவிடி னுயிர்நில்லாது' என்பது அவாய்நிலையான் வந்தது. 'போதகத்தேன் வண்டு' எனவும், 'என்னல் வினைதான் வனைந்தாலன கொங்கைமாதுரு வாய்' எனவும் மாறுக. (௮௭)

பாங்கி நின்குறை நீயேசென் றுரையென்றல்.

(இது வெளிப்படை.)

மருப்பா வியதொங்கல் வாணன்றென் மாறை வனசமலர்த்
திருப்பாவை யன்னவென் சேயிழை யாட்குன் றிருவுளத்து
விருப்பா கியகுறை யுள்ளதெல் லாஞ்சொல்லி வேண்டுகநீ
பொருப்பா மொழியப் பெறுரொம்ம னோரிவை போல்வனவே.

இ-ள். குறிஞ்சிநிலத் திறைவனே! மணம்பொருந்திய மாலையையுடைய வாணனது தென்மாறைநாட்டுத் தாமரைமலரி லெழுந்தருளியிருக்குந் திருமாதுபோன்ற எம்பெருமாட்டிக்கு உனது திருவுளத்து விருப்பமாகிய குறையுள்ளதெல்லாம் நீயே சொல்லி வேண்டிக்கொள்வா

‡ திருக்குறள், தே. ௨௦.

யாகவன்றி எம்போல்வார் இவைபோன்ற க்ாரியங்கள் மொழியப்பெறுந் தருதியரல்லார். எ - று.

மரு - மணம். பரவுதல் - பொருந்துதல். தொங்கல் - மாலை. வனச மலர் - தாமரைமலர். திருப்பாவை - திருமாது. பொருப்பன் - குறிஞ்சி நிலத்திறைவன். (அஅ)

பாங்கியைத் தலைவன் பழித்தல்.

(இது வெளிப்படை.) பழித்தல் - பழித்துக்கூறல்.

வில்லார் நுதல்வெய்ய வேலார் விழிக்கென் மெலிவுசொல்ல [ன்
வல்லா ரிலைசொல்ல வல்லையென் றியான்றஞ்சை வாணன்றெவ்வி
ஒல்லா திதுநுமக் கென்றுண ரேனின் றுணங்கியிந்நாள்
எல்லா மிரந்தது நின்குறை யேயல்ல வென்குறையே.

இ - ள். வில்போன்ற நுதலும், வெவ்வியவேல்போன்ற விழியுமுடை யாட்கு எனது மெலிவுசொல்ல நின்னையல்லால் வல்லாரில்லை; நீ வல்லை யென்றெண்ணி யான் தஞ்சைவாணனுக்குப் பகைவர்செய்தி யார்க்கும் பொருந்தாததுபோல, என்செய்தி நுமக்குப் பொருந்தாதென்று அறியேன் வேட்கைவெயிலினு லுலர்ந்து, செஞ்சுடர்தோன்றுங் காலையில் தொடங்கி இன்றுகிய இந்நாள் முற்றும் நும்மை யிரந்தது நின்மேற் குறையல்ல, என் மேற்குறை. எ - று.

ஆர் - ஒப்பு. 'நுதல்விழி' என்புழி உம்மைத்தொகை. விழி-ஆகுபெயர். தெவ் - ஆகுபெயர். ஒல்லாது - பொருந்தாது. உணங்கல் - உலர்தல். 'இன்றிந்நாள்' என இயையும். 'நின்குறையல்ல வென்குறை' என்றது குறிப்புமொழி. 'கற்கறித்து நன்கட்டாய்' என்பதுபோல ‡"வயக்குறு மண்டிலம்" என்னும் பாலைக்கலி பன்னிரடித்தரவில் "இறத்திராலைய மற் றிவ ணிலைமை கேட்டமின்" என்றதுபோலும் ஒருமை பன்மை மயக்க மெனக்கொள்க. பாங்கி - முன்னிலையெச்சம். (அகூ)

'இன் றிந்நாளெல்லா மிரந்தது' என்று வறையறுத்துக் கூறியவதனுல் 'குறையுற வுணர்தல்' முதல் நாலாநாட் செய்தியென்று அறிவித்தற்குக் கூறியவாறென் றுணர்க.

பாங்கி பேதைமை யூட்டல்.

பாங்கி பேதைமை யூட்டல் எ - து. தலைவி பிறதயரமறியாளெனப் பேதைமையைப் பாங்கி தலைவன் உளங்கொளச் சாற்றல்.

தேனுஞ் சுரும்புஞ் செறிதொங்கல் வாணன்றென் மாறைவெற்பா
மானுங் கலையும் வடிக்கணை யாலெய்து மன்னுயிரும்
ஊனுங் கவர்கின்ற தன்னையர் போலயி லொத்தகண்ணுள்
தானும் பிறருள்ள நோயறி யாத தகைமையளே.

‡ கலித்தொகை, பாலைக்கலி, செ. ௨௯.

இ - ள். பெடையுஞ் சுரும்புஞ் செறிந்த மாலையை யணியும் வாணனது தென்மாறைநாட்டு வெற்பிலுள்ளவனே! மானும் கலையும் வடித்த கணையாலெய்து அவ்விலங்கினது உயிரும் ஊனுங்கொள்கின்ற தன்னுடன் பிறந்த தன்னையர்போல, வேலொத்த கண்ணினை யுடையாள் தானும் பிறருள்ளத்தின்கண்ணுள்ள நோயையறியாத முறைமையன்று. எ - று.

தேன் - சாதிப்பெயர்; பெடைமேல் நின்றது. சுரும்பு - ஆண்வண்டு. வடி - வடித்தல். கவர்தல் - கொள்ளுதல். தன்னையர் - தமையர். அயில் - வேல். தகைமை - முறைமை. ஓரிடத்திற் பிறந்தவாகலான் தன்னையர் குணம் இவட்குமாயினவாறுணர்க. (௧௦)

காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்.

காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல் எ - து. அவ்வாறு கூறிய பாங்கியை நோக்கி முதிர்ந்த அறிவினையுடையாள் தலைவி, அவளை அவ்வாறு கூறற்பாலையல்லவென்று தலைவன் கூறல்.

வருநீர் வனமுலை மங்கைநல் லாய்செங்கை வாணன்வையை
தருநீர் மலிவயற் றஞ்சையன் னாளன்று தஞ்சமிலேன்
நருநீர் நவையுறக் கண்மலர் நீர்தெளித் தாற்றினளால்
இருநீர் நிலங்கொள்ளு மோவறி யாளென்னு மிவ்வுரையே.

இ - ள். அழகின்றன்மை நாட்கு நாள்மிக்காய்த்தோன்றும் முலையையுடைய மங்கைப்பருவ நல்லாய்! சிவந்த கையையுடைய வாணனது வையையாறு தரும் நீரான் மலிந்த வயலினையுடைய தஞ்சைநகர்போல்வாள் முன் பற்றுக்கோடில்லேன், பிறரெய்தற் கரிதாகிய கல்வியறிவு வேட்கையான் குற்றமுறும்போது, அக் குற்றந்தீரத் தனது கண்மலரினுள்ள் அருளாகிய நீரைத்தெளித் தாற்றினளாதலால், அவளை யறியாளென்று கூறிய இவ்வுரையைப் பெருநீர் சூழ்ந்த இவ்வுலகம் முறைமையென்று கொள்ளாது. எ - று.

'வனநீர் வருமுலை' என மாறுக. மலிதல் - நிறைதல். தஞ்சம் - பற்றுக்கோடு. அருநீர் - அரிய கல்வியறிவு. நவை - குற்றம். நீர் - அருள். ஆற்றுதல் - தணித்தல். இருநீர் - பெருநீர். ஓகாரம் - எதிர்மறை. (௧௧)

பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்.

பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக்கூறல் எ - து. இவ்வாறு கூறக் கேட்ட பாங்கி முன் நின்வேட்கை தீர்த்தாளென்று கூறினையே, அவ்வாறு இன்னங் கூடுகவென்று கூறல்.

செறிவளர் காவி வயற்றஞ்சை வாணன் சிறுமலைமேல்
நெறிவளர் வார்குழ னேரிழை யாளன்ன நீர்மையளேல்
குறிவளர் காவின்முன் கூடிய வாறின்னுங் கூடுகநீ
கறிவளர் சாரல்வெற் பாபிற ராலென்ன காரியமே.

இ - ள். கறிக்கொடி வளருஞ் சாலையையுடைய வெற்பனே ! ஒழுங்காய் வளர்ந்த வார்ந்த குழலையுடைய நேரிழையாள் நின் வேட்கை தணிக்கும் அத் தன்மையாகிய குணமுடையாளேல், வளருங்காவி செறிந்த வயல் சூழ்ந்த தஞ்சைவாணன் சிறுமலைமேல் நீ கூடுங்குறி வளரப்பட்ட காவில் முன் கூடியவாறுபோல் இன்னுங் கூடுக ; என்போலும் பிறரால் என்னகாரியம் ? எ - று.

'வளர்காவி செறிவயல்' என மாறுக. காவி - நீலம். நெறி - ஒழுங்கு. குறி - கூடுமிடம். கறி - மிளகு; ஆகுபெயர். சாரல் - மலைப்பக்கம். (௬௨)

தன்னிலை தலைவன் சாற்றல்.

தன்னிலை தலைவன் சாற்றல். எ - து. இவ்வாறு கூறக்கேட்ட தலைவன் வேட்கை நோயால் உழக்குந்தன்மை கூறல்.

உணைத்தென் பிறவந்தப் பைந்தொடி யாக முறுவிடில்வெண்
டிரைத்தென் கடன்முத்துந் தன்மலைச் சந்துஞ் செழும்பனிநீர்
அரைத்தென் புருகமெய் யப்பினும் வெப்ப மாறுதினிநின்
வரைத்தென் கருமமெல் லாந்தஞ்சை வாணன் வரையணங்கே.

இ - ள். தஞ்சைவாணன் மலையிலிருக்கும் அணங்கே ! அந்தப் பைந்தொடியை யுடையாளது ஆகத்தைக் கூட்டாவிடில் யான் சொல்லியென்னபயன் ? வெண்மை நிறம்பொருந்திய திரைபொருந்தும் தென்கடலிடைப் பிறந்த முத்தும், பொதியமலையிற்பிறந்த சந்தனமுஞ் செழும்பனிநீர்விட்டரைத்து வேட்கைத்தீயில் வெதும்பிய எலும்புருக என்மேனியெங்கும் அப்பினும் வெப்பமாறாது; இன்று எனது காரியமெல்லாம் நினதெண்ணத்தின்மட்டிற்பட்டது. எ - று.

எனவே,—உய்யச்செய்யினும் நையச்செய்யினும் நீயல்லால்வேறில்லையென்றவா றாயிற்று. பிற - அசைநிலை. பைந்தொடி - அன்மொழித்தொகை. ஆகம் - மெய். திரை - அலை. தென்மலை - பொதியம். சந்து - சந்தனம். ஆறுது - அறது எனக் குறுக்கும்வழி குறுக்கலாய் நின்றது; வாராது - வரது, தாராது - தரது என்றாற்போல. (௬௩)

பாங்கி யுலகிய லுரைத்தல்

பாங்கி யுலகிய லுரைத்தல் எ - து. இவ்வாறு கூறக்கேட்ட பாங்கி உலகில் வேட்கை கொண்டோர் சான்றோரை முன்னிட்டு வரைந்து கொள்வர், அவ்வாறு உலகியலால் நீயும் வரைந்துகொள்கவெனக் கூறல்.

விரையக நாண்மலர் மெல்லியன் மாதை விரும்பினையேல்
வரையக நாட வரைந்துகொ ணீதஞ்சை வாணன்முந்நீர்
தரையக நான்மறைக் கேள்வியர் வேள்வியர் சான்றவர்தம்
உரையக நாடிமுன் னிட்டன தாகு முலகியலே.

இ - ள். மலையிடமாகிய நாட்டையுடையவனே! தஞ்சைவாணனது முந்நீர் சூழ்ந்த புவியகத்தில் வேட்கைகொண்டார் செய்யும் உலகமுறைமை நான்கு மறையையுங் கேள்வியாலறிந்து வேள்விசெய்யுஞ் சான்றவர் கூறு முரையிடத்துக் கொண்ட பொருளைக் கருதி அவரை முன்னிட்டு வரைந்துகொள்ளில் அன்னதாகுமாதலால், மணத்தைத் தன்னிடத்திலேயுடைய நாண் மலரிலிருக்கும் மெல்லிய இயல்பினையுடைய மாதுபோல்வாளை விரும்பினையேல், நீ வரைந்துகொள்வாயாக. எ - று.

விரை - மணம். நாண்மலர் - முறுக்கவிழ்மலர். **மாது** - ஆகுபெயர். வரைதல் - மணஞ்செய்தல். **உரையகம்** - ஆகுபெயர். **கேள்வியர்** - முற்றெச்சம். **அனது** - இடைக்குறைவிகாரம். (௬௪)

தலைமகன் மறுத்தல்.

(இது வெளிப்படை.)

வெண்டா மரைமங்கை காதல னாகிய வேதியன்பால்
உண்டா கியதொல் லுலகிய லாலுங்க ளாரணங்கை
வண்டார் குழலி வரைந்துகொள் வேன்றஞ்சை வாணன்வண்மை
கண்டா லருளுள்ள நீயென தாருயிர் காத்தபின்னே.

இ - ள். வண்டார்ந்த குழலையுடையாய்! தஞ்சைவாணனது கொடைகண்டாற்போலும் அருளுள்ள நீயாதலால், இப்போது என்னுடைய அரியவுயிரோகுந் தன்மையவாய் நின்றது, அது ஏகாமற் காத்தபின் வெண்டாமரை மங்கைக்குக் கணவனாகிய மறையோனிடத் துண்டாகிப் பழைமையாகிய வுலகியலால் உங்களுடைய ஆரணங்குபோல்வாளை நீர் சொன்னபடி வரைந்துகொள்வேன். எ - று.

வெண்டாமரைமங்கை - வாணி. வேதியன் - பிரமன். **ஆரணங்கு** - ஆகுபெயர். நல்குரவால் உயிர்போகின்றதைப் போகாமல் நிலைமையைச் செய்யுங் கொடையாதலால், அக்கொடையைக்கண்டாற்போலும் அருளுள்ள நீ யெனவே, கொடைக்கும் அவளருளுக்கும் உவமைகூறியவாற்றான் 'எனதாருயிர் காத்தபின்' என்று கூறியவா றுணர்க. வண்மை - கொடை. (௬௫)

பாங்கி யஞ்சி யச்சுறுத்தல்.

பாங்கியஞ்சி யச்சுறுத்தல் எ - து. பாங்கி தானும் அஞ்சினவளாய்த் தலைவனை அப்புனம்விட்டுப்போக அச்சமுறுத்திக் கூறல்.

மல்லார் புயன்றஞ்சை வாணன்வெற் பாவெமர் வந்தினியிக்
கல்லார். வியன்புனங் காவல்வி டாரவர் காணின்மிகப்
பொல்லா திருண்டது போதுமற் றியாங்களும் போதுமிங்கு
நில்லா தெழுந்தரு ணீயுமிப் போது நெடுந்தகையே.

இ - ள். மற்றொழில் பொருந்திய புயத்தையுடைய தஞ்சைவாணன் வெற்பிடத்துள்ளவனே! எங்கட்குத் தமராயுள்ளவர் இன்றுவந்து மலையார்ந்தகன்ற புனம் இராக்காவல்விட்டார்; அவர் நின்னைக்காணில் மிகவும் பொல்லாராயிருப்பர்; நெடுந்தகையை யுடையவனே! இருண்டதுபோது எம்மூர்க்கு யாங்களும் போதும், நீயும் இப்போது இங்கு நில்லாதெழுந்தருள்வாயாக. எ - று.

எமர் - எமக்குத்தமர். வியன் - அகற்சி. **நெடுந்தகை** - அன்மொழித்தொகை. இதனுள் 'வெற்பா' எனவும், 'நெடுந்தகை' எனவும் இரண்டிடத்தும் பொருட்பெயர் முன்னிலையாய் நின்றது. இவ்வாறு வந்ததென்னையெனின், —

‡ "பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்
பொருள்வேறு படாஅ தொன்றா கும்மே."— என்னுஞ் சூத்திரவிதியால்,

‡‡ "பொற்பூண் சுமந்த புணர்மென்முலைக் கோடுபோழ
நற்பூங் கழலா னிருதிங்க ணயந்தவாறுங்
கற்பா டழித்த கனமா மணித்தூண் செய்தோளான்
வெற்பூ டறுத்து வினைவின்னெறிக் கொண்டவாறும்." — இதனுள் 'நற்பூங்கழலான்' எனவும், 'கற்பாடழித்த கனமாமணித்தூண் செய்தோளான்' எனவும் இரண்டிடத்தும் படர்க்கைப்பெயர் ஒரு பொருளைக் கருதியவா றுணர்க.

"வையைக் கிழவன் வயங்குதார் மாணகலந்
தையலா யின்றுநீ நல்கினை - நல்காயேற்
கூடலார் கோவொடு நீயும் படுதியே
நாடறியக் கவ்வை யொருங்கு." — என்பதனானு முணர்க.

இவ்வாறு வருதல் பெரும்பான்மையும் வழுவமைதியாய் வருதலின், இச்செய்யுளுள்ளும் இரண்டிடத்தும் முன்னிலைப் பொருளைக் கூறியவா றுணர்க. மற்று - அசை. (௯௯)

---

‡ தொல். சொல். கிளவியாக்கம், சூ. ௩௭.

‡‡ சிந்தாமணி, பதிகம், செ. ௧௪.

தலைவன் கையுறை புகழ்தல்.

(இது வெளிப்படை.)

சிமையார் மலயத் தமிழ்த்தஞ்சை வாணன் சிறுமலைமேல்
அமையா கியதடந் தோளன்ன மேயணி யத்தகுமால்
உமையா ளிறைவன் பயில்கயி லாயத்து மும்பர்தங்கு
இமையா சலத்துமெல் லாமில்லை யானிக ரித்தழைக்கே.

இ - ள். சிகரத்தைப் பொருந்திய பொதியமலையிற் பிறந்த தமிழ் வளர்க்குந் தஞ்சைவாணனது சிறுமலைமேலிருக்கும் மூங்கிற் பெரியதோளை யுடைய வண்ணம் போல்வாய்! இத்தழைக்கு நிகர் உமையாள் இறைவனாகிய சிவன் பிரியாது பழகியிருக்குங் கயிலாயத்தும், தேவர்கள் பிரியாதிருக்கும் இமையாசலத்தும் முற்றுமில்லை யாதலால் அணியத்தகும். எ - று.

சிமையம் - சிமை யென விகாரப்பட்டு நின்றது. மலயம் - பொதிய மலை. அமை - மூங்கில். தடந்தோள் - பெரியதோள். அன்னம் - ஆகு பெயர். நிகர் - ஒப்பு. ‘தடந்தோளாகிய’ என மாறுக. ஆல் - அசை. இத்தழைக்கு நிகரில்லை யென்று கூறுவ தென்னையெனின், தன்னுயிரை நிறுத்தற் கேதுவாகலானும், மனத்துக்குத் தான்முன்னிற்றலானுமென் றுணர்க. (கூஎ)

பாங்கி கையுறை மறுத்தல்.

(இது வெளிப்படை.)

மல்குற்ற தண்புனல் சூழ்தஞ்சை வாணன் மலயவெற்பா
நல்குற் றவையிந்த நாட்டுள வன்மையி னன்னுதலாள்
அல்குற் றடத்தெமர் கண்டா லயிர்ப்ப ரதுவுமன்றிப்
பல்குற் றமும்வரு மால்யாங்கள் வாங்கேம் பசுந்தழையே.

இ - ள். நிறையுற்ற தண்புனல் சூழ்ந்த தஞ்சைவாணன் மலயவெற்பி லிருப்பவனே! நீ தரப்பட்ட இத்தழை இந்நாட்டிலுள்ள வல்லமையால் நன்னுதலாள் அல்குற் றடத்திலே யணியில் எமக்குத் தமராயுள்ளார் கண்டால் ஐயப்படுவர்; அதுவுமன்றிப் பல குற்றமும் வருமாதலால் இப் பசுந்தழையை யாங்கள் வாங்குதல்செய்யேம். எ - று.

மல்குறல் - நிறைதல். நல்குறல் - தருதல். அயிர்த்தல் - ஐயப்படு தல். குலத்துக்கும், தலைவிக்கும், தனக்கும் மறுவென்பதுபற்றிப் பல குற்ற மென்று கூறினள். (கூஅ)

ஆற்ற நெஞ்சினோ டவன் புலத்தல்.

ஆற்றுநெஞ்சினோ டவன்புலத்தல் எ - து. ஆற்றாமையாகிய நெஞ் சுடனே தலைவன் புலந்து கூறியது.

உழையும்வெங் கானமும் போலுங்கண் ணாளொரு காலமுள்ளங்
குழையுமெம் பாலென்று கொண்டநெஞ் சேகலிக் கோடைமண்
மழையுமந் தாரமும் வந்தன வாணன்றென் மாறையின்மாந் [மேல்
தழையுநம் போலிங்ங னேகவின் வாடத் தவஞ்செய்ததே.

இ - ள். மானும் வெவ்வியவிடமும்போலுங் கண்ணையுடைய பாங்கி யானவள் யாம் இரந்து பின்னின்றே மாயின், ஒருகால் மனமிளகுமென் றெண்ணங்கொண்ட நெஞ்சே! கலியாகிய கோடைசூழ்ந்த இம்மண்ணுல கின்மேல், கோடை வெப்பர்தணிய மழையும் மந்தாரமும் வந்தாற்போன்ற வாணன் தென்மாறைநாட்டில், நம்மைப்போல் இந்த மாந்தழையும் அழகு வாடத் தவஞ்செய்தது, யாம் என்செய்வோம்! எ - று.

உழை - மான். கானம் - விடம். குழைதல் - இளகுதல். கவின் - அழகு. 'மழையு மந்தாரமும்' என்பதற்கு மேகமும் மந்தாரத் தருவும் என்று பொருளுரைப்பாருமுளர். மழைபோல் உடனே வெப்பந் தணி யாமையின் அது பொருளன்மையுணர்க. 'யாம் என்செய்வோம்' என்பது சொல்லெச்சம். (௯௯)

பாங்கி யாற்றுவித் தகற்றல்.

பாங்கி யாற்றுவித் தகற்றல் எ - து. இவ்வாறு கூறுதல்கேட்ட பாங்கி தலைவனை யஞ்சலை நாளைவாவெனக் கூறிவிடுத்தல்.

சோலையில் வாழிளந் தோகையன் னாளைத் தொழுதிரந்திம்
மாலையில் வாழி வரங்கொள்வல் யான்றஞ்சை வாணன்வெற்பா
வேலையில் வார்துகி ரன்னவெய் யோன்வெயில் வெற்பின்மல்கும்
காலையில் வாபின்னை யென்கைய தாகுநின் கையுறையே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பனே! சோலையில் வாழும் இளந் தோகைபோல்வாளை யான் இவ்விராமுற்றுந் தாளிற் பணிந்திரந்து வரமாக வேண்டிக்கொள்வன்; கடலில் நெடிய பவளம்போன்ற கதிரோனது கிர ணம் வெற்பிலெல்லாம் நிறையுங் காலைப்பொழுதில்வா; வந்தாயேல், அப் போது நின் கையுறை யென்கையதாகும். எ - று.

தோகை - மயில். வாழி - அசைநிலை. வேலை - கடல். துகிர் - பவ ளம். வெய்யோன் - சூரியன். வெயில் - கிரணம். மல்குதல் - நிறைதல். கையிலுறைதலின் கையுறையாயிற்று. (௧௦௦)

இந்துணையும் ஐந்தாநாட்செய்தி.

தலைமகன் கூற்றாயினவெல்லாம் இரந்துபின்னிற்றற்கும், பாங்கி கூற்றாயின வெல்லாஞ் சேட்படுத்தற்கும் உரியவாறு காண்க.

இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல்.

இரந்து * * * மதித்தல். எ - து. மற்றைநாட் காலையில் வந்த தலைமகன் இவளாற் காரியமின்றெனக் கருதி, இரந்து குறைபெறாதாயினேமென்று வருத்தமுற்று, இனி நமக்குப் பொருளாவது மடலேயெனத் தன்னுள்ளே மதித்துக் கூறல்.

திருந்தார் தொழுங்கழற் சேயன்ன வாணன்றென் மாறைவெற்பில்
அருந்தா வமுதன்ன வஞ்சொனல் லாரழ கார்குழைதோய்
பெருந்தாரை வேல்விழி தந்தவெங் காமப் பிணிதனக்கு
மருந்தா வதுநெஞ்ச மேயில்லை வேறு மடலன்றியே.

இ - ள். நெஞ்சமே! பகைவர் தொழுந் தாளையுடைய முருகவேளை யொத்த வாணன் தென்மாறை வெற்பிடத்து ஆராவமுதுபோன்ற அழகிய சொல்லையுடைய மடவாருடைய முகத்திற்கு அழகாயார்ந்த குழையைத் தொட்ட மணிபொருந்திய பெரிய வேல்போன்ற விழிப்பார்வையானது தந்த வெவ்விய காமமாகிய பிணிக்கு மருந்தாவது மடலேறலே யன்றி வேறில்லை. எ - று.

எனவே, — யாம் அது செய்யக்கடவேம் என்பதாயிற்று.

மடலேறலாவது, — தலைவன் ஒவ்வாக் காமத்தால் பனங்கருக்காற் குதிரையும், பனந்தருவி னுள்ளனவற்றால் வண்டில் முதலானவுஞ்செய்து அக்குதிரையின் மேலேறுவது. மடலேறுவான் திகம்பரனாய் உடலெங்கும் நீறுபூசிக் கிழி ஓவியர் கைப்படாது தானே தீட்டிக் கிழியின் தலைப்புறத்தில் அவன்பேரை வரைந்து கைப்பிடித்து, ஊர்நடுவே நாற்சந்தியில் ஆகார நித்திரையின்றி, அக்கிழிமேற் பார்வையுஞ் சிந்தையு மிருத்தி, வேட்கை வயத்தனாய் வேறுணர்வின்றி, ஈ ஊரினும், அழல் மேற்படினும் அறிதலின்றி, மழை வெயில் காற்றான் மயங்காதிருப்புழி, அவ்வூரிலுள்ளார் பலருங்கூடி வந்து நீ மடலேறுதியோ? அவளைத்தருதும், சோதனை தருதியோ? என்றவழி இயைந்தானாயின், அரசனுக்கறிவித்து, அவனேவலால் அவன் இனைந்துகையத்தந்து மடலேறென்றவழி, ஏறுமுறைமை - பூளை யெலும்பு, எருக்கு இவைகளாற்கட்டிய மாலையணிந்துகொண்டு அம்மாவிலேற, அவ்வடத்தை வீதியிலீர்த்தலும், அவ்வுருளை யுருண்டோடும்பொழுது, பனங்கருக்கு அறுத்த விடமெல்லாம் இரத்தந் தோன்றாது வீரியந்தோன்றின், அப்போது அவளை யலங்கரித்துக்கொடுப்பது; இரத்தங்கண்டுழி அவனைக் கொலைசெய்துவிடுவது. இவை புலவரால்நாட்டிய வழக்கென்றுணர்க.

சேய் - முருகன். தோய்தல் - தொடுதல். தாரை - கண்மணி. 'பெருவேல்' என மாறுக. **வேல்விழி** - அன்மொழித்தொகை. காமத்தைப் பிணியாகக் கூறப்பட்டமையின் மடலேறுதலை மருந்தாகக் கூறப்பட்டது.

பாங்கிக் குலகின்மேல் வைத்துரைத்தல்.

பாங்கிக் குலகின்மேல் வைத்துரைத்தல் எ - து. தலைவன் அம்மட லேற்றினை யுலகின்மேல்வைத்துப் பாங்கிக்குக் கூறுதல்.

விரையூர் குழலியர் தந்தசிந் தாகுல வெள்ளநிரைக்
கரையூர் பொழுதிளங் காளையர் தாங்கிழி கைப்பிடித்துத்
தரையூர் தொறும்பெண்ணை மாமட லூர்வர் தவிர்ந்துபின்னும்
வரையூர்வர் தஞ்சையர் கோன்வாணன் மாறையில் வாணுதலே.

இ - ள். தஞ்சையிலுள்ளார்க் கிறைவனாகிய வாணன் தென்மாறை நாட்டிலிருக்கும் ஒளிபொருந்திய நுதலினை யுடையவளே! மணமூருங் குழலையுடைய மாதர்தந்த காதலாகிய வெள்ளமானது நிரைத்த கரையின்மேற் செல்லும்போது, இளங்காளையாக தாம் வரைந்த கிழியைக் கையிலே பிடித்துப் புவியின்க ணுளதாகிய வூர்கடோறும் பனைமடலின் றற் செய்த மாவை நடத்துவர்; அதனாற் சிந்தனைமுடியாவிடில், அதனை விடுத்துப் பின்னும் வரைபாயச்செல்வர்: இதனை நீ யறிவாயாக. எ - று.

விரை - மணம். ஊர்தல் - நாற்றிக்குஞ்சென்று கமழ்தல். கரையூர்தல் - கரைமேற்செல்லுதல். கிழி - தலைவியுரு வெழுதப்பட்டது. பெண்ணை - பனை. 'மடல்மா' வென மாறுக. வரையூர்தல் - வரைபாய நடத்தல். (௧௱௨)

அம் மடலேற்றினைத் தலைவன் தன்மேல்வைத்துச் சாற்றல்.

அம்மடலேற்றினை * * * சாற்றல் எ - து. அம்மடலேற்றினைத் தலைவன் தன்மேல்வைத்துக் கூறல்.

வன்பணி போனிலந் தாங்கிய வாணன்றென் மாறைவெற்பில்
மின்பணி பூண்முலை மெல்லிய லீர்குறை வேண்டியுங்கள்
முன்பணி வேனின்று நாளைவெண் பூளை முகிழெருக்கோ
டென்பணி வேன்மடன் மேல்வரு வேனிவை யென்பணியே.

இ - ள். வலிய அநந்தனைப்போல நிலவுலகத்தைத் தாங்கிய வாணன் தென்மாறை வெற்பில் மின்னும் பணியு மொளிப்பூண்பொருந்திய முலையினையுடைய மெல்லியலீர்! எனது குறையை முடிக்கவேண்டி யின்று உங்கள்முன்பணிவேன்; யான் பணிதலைக்கண்டு என்குறையை முடியாவிடில், நாளை வெண்பூளைப்பூ எருக்கமுகையுடனே யென்புமாலையணிந்து மடன்மாவேறிவருவேன்: என்னுடைய தொழிலவை. எ - று.

'முடியாவிடில்' என்பது அவாய்நிலையான் வந்தது. வன்பணி - அநந்தன் 'எருக்கமுகிழ்' என மாறுக. அணிவேன் - முற்றுச்சொல் எச்சமாய் நின்றது. பணி - தொழில்.

இவ்வாறு மடலேறுவேனென்று கூறியது பெருந்திணைப்பாற்படுமோ வெனின், படாது. என்னை,—தலைவன் பாங்கி புடன்படவேண்டுமென்று குறித்துச் சொல்லியதல்லது மடலேறுங் கருத்தாய்க் கூறினனல்லன். ஆதலானன்றே மடலேற்றெனவையாது மடற்கூற்றென்று கூறியது, சான்றோர் செய்யுட்களிலெல்லாம், மடற்கூற்றென்றே வருவதல்லது மடலேற்றென வாராமையானும், ‡ "மடன்மா கூறு மிடனுமா ருண்டே." என்று தொல்காப்பியர் கூறியவாற்றானு முணர்க. (கoகூ)

பாங்கி தலைமகள் அவயவத் தருமை சாற்றல்.

பாங்கி தலைமகள் அவயவத்தருமை சாற்றல் எ-து. அவ்வாறு கூறக்கேட்ட பாங்கி கிழிதீட்டிப் பின்னன்றோ மடலேறுவது, ஆதலால் தலைவி யவயவந் தீட்டுதற் கருமையென்று கூறல்.

தொடையே யெருக்கென்பு நீயணிந் தாலென்னை சூல்வளையூர்
மடையேய் வயற்றஞ்சை வாணன்வெற் பாமல ரோன்வகுத்த
படையே நயனம் படைத்தபொற் பாவை படியெடுக்க
இடையே தெனத்தெரி யாதுளை யாணி யிடவரிதே.

இ-ள். சூல்கொண்ட சங்குகளுரும் மடைபொருந்திய வயல்சூழ்ந்த தஞ்சைவாணன் வெற்பனே! மாலையாக எருக்கையும் என்பையும் நீ யணிந்தால் நினக் கியாதுபயனைத் தரும்? கிழிதீட்டிய பின்னன்றோ மடலேறுவது, தீட்டுதல் நின்னால் முடியாது; எங்ஙனமெனின், பிரமன் வகுத்த படைக்கலமே நயனமாகப்படைத்த பொற்பாவையது உருப்படியெடுக்க இடையாதெனின் தெரியாது; சொல்லை யெழுதுகருவியா லெழுதவரிது.

இதனுள் 'பொற்பாவை' என்பது பொன்னம்பாவையாக்கிப் படிக் கல்லிட்டு நிறுக்க நிறையேதெனத்தெரியாது, உரைக்கவெண்ணின் உரையாணி யிடவரிது; இவ்வாறு வேறுபொருடோன்றிச் சிலேடையாய் நின்றதுகாண்க.

தொடை - மாலை. ஏகாரம் - ஈற்றசை. சூல்வளை - கருப்பங்கொண்ட சங்கு. 'எருக்கென்பு' என்புழி எண்ணும்மை தொக்குநின்றது. உரையாணி - உரையை யறிவிக்குங் கருவி. (கoச)

தலைவன் தன்னைத்தானே புகழ்தல்.

தலைவன் தன்னைத்தானே புகழ்தல் எ-து. இவ்வாறெழுத லரிதென்று கூறிய பாங்கியை நோக்கி யானெழுத வல்லேனெனத் தன்னைத் தானேபுகழ்ந்து தலைவன் கூறல்.

---

‡ தொல். பொருள். களவியல்; சூ. கக.

நறையல ராவிரைப் போதிசை யாதிசை நான்முகத்தும்
மறையல ராவந்த மான்மகன் யான்றஞ்சை வாணன் வையைத்
துறையல ராவியங் காவியங் கண்ணி துணிந்துசொல்லுங்
குறையல ரார்குழ லாட்கினித் தீரக் குறையில்லையே.

இ - ள். நறையலரென்னும் அவ் விரைப்போதி லிசைந்த திக்கொரு முகமாகும் நான்முகத்திடத்தும் வேதம் விரிவாகவந்த மாலுக்கு மகன் யானுதலால், தஞ்சைவாணன் வையைத் துறையினும், விரிவாகிய வாவியினும், நீரிற் றோன்றிய காவிப்பூப்போலுங் கண்ணையுடையாய்! நீயெழுதப் படாதென்று துணிந்து சொல்லுங் குறையலரார்ந்த குழலையுடையாட்கு இன்றெழுதப்படாதென்று விடத்தக்கதாய குறையில்லை. எ - று.

இன்னுமோர் பொருள், — நறையலரென்னும் அவ்விரைப்போதி லிசையாது நான்கு திசையிடத்துங் களவு வெளியாகவந்த ஆசைகொண்ட புருடன் யானெனச் சிலேடைவகையால், பிரமன் யானெனத் தோன்றிய வதனுல் எழுதற்கரிய தின்றென்று கூறியவாறுயிற்று.

நறை - மணம். அவ்விரா-அவிரா யெனச் சுட்டு நீண்டது, ஆவயி னுன என்றாற்போல. பிரமன்மே லேற்றுங்கால்,—இசையா - இசைந்து. மறை - வேதம். அலராவந்த - விரிவாகவந்த. மால் - மாயோன். மகன் - பிரமன். தலைவன்மே லேற்றுங்கால்,— இசையா - இசையாது. நான் முகம் - நான்கிடம். மறை - மறைகள். அலராவந்த - வெளியாகவந்த. மால் - ஆசை. மகன் - புருடன். ஆவி - வாவி. அம் - நீர். காவி - நீலப்பூ. அம் - சாரியை; அழகு. கண்ணி - அண்மைவிளி. தீர்தல் - விடல் ‡ "தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட்டாகும்." என்பதனுற்கொள்க. குறை - குற்றம். குறை - குறைவு (௧௦௫)

பாங்கி அருளியல் கிளத்தல்.

பாங்கி அருளியல் கிளத்தல் எ - து. அவ்வாறு தலைவன் கூறக் கேட்ட பாங்கி மடலேறத்தகாதென அருண்முறைமை கூறுதல்.

செயலார் குடம்பையிற் செந்தலை யன்றிற் சினையுளபைங்
கயலார்வனவெண் குருகின்வன் பார்ப்புள கைக்கடங்கா
மயலார் களிற்றண்ணல் வாணன்றென் மாறைவை யைத்துறைவா
இயலா தருளுடை யார்க்கென்று மாமட லேறுவதே.

இ - ள். பாகன் கைக்கடங்கா மதத்தால் மயக்கமார்ந்த களிற்றரசனுகிய வாணன் தென்மாறைநாட்டில் வருகின்ற வையைத் துறைவனே! பனையில் புட்களாற் செய்யப்பட்ட செயலார்ந்த கூட்டில் சிவந்த தலையினையுடைய அன்றில் முட்டைகளுள் பசிய கய லார்வனவாகிய வெண்

‡ தொல். சொல், உரியியல், சூ. ௨௨.

ணிறக்குருகின் வளவிய பார்ப்புகளுள்ள வாதலால், அருளுடையார்க்கு எக்காலத்தும் மடன்மா வேறுதல் பொருந்தாது. எ - று.

எனவே,—மடலேறத் தகாதென அருண்முறைமை கூறுதல். பனையை வெட்டலும், முட்டைகளைச் சிதைத்தலும், பார்ப்புகளை வதைத்தலுமாகிய பாவங்கள் சூழ்தலின், அருளுடையோர்க் காகாதென்றவா றாயிற்று. மடற்கூற்று அதிகாரப்பட்டு வருதலின் பனையென வருவிக்கப்பட்டது.

செயல் - தொழில். குடம்பை - கூடு. 'செந்தலையன்றில்' - வண்ணச் சினைச்சொல்.—

‡ "அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்." — என்னுஞ் சூத்திரத்தா னுணர்க.

சினை - முட்டை. குருகு - நாரை. பார்ப்பு - பிள்ளை.— ‡‡ "பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை." — என்பதனு னுணர்க. மயல் - மயக்கம். களிறு - யானை. இயலாது - பொருந்தாது. அண்ணல் - வேந்தன். (௧௦௬)

கொண்டு நிலைகூறல்.

கொண்டு நிலைகூறல் எ - து. தலைவன் உயிரைத் தாங்கிக்கொண்டு நிற்கும் நிலைமையாகிய மொழியைப் பாங்கி கூறல்.

வெண்டோ டணிமுகப் பைங்குரும் பைக்கொங்கை வெய்யவுண்
கண்டோர் விரும்புங் கரும்பனை யாரைக் கடற்றுறைவா [கண்
கொண்டோர் குறைமுடி கொம்பனை யார்நின் குறைமறுத்தால்
வண்டோ விடுந்தொங்க லான்வாணன் மாறை வளநகர்க்கே.

இ - ள். கடற்றுறைவா! கொம்பனையார் நினது குறையை மறுத்தால், வெண்மைநிறம்பொருந்திய தோடணிந்த முகத்தையும், பசிய குரும்பையாகிய கொங்கையையும், உண்ணப்பட்ட வெய்ய கள்ளையுமுடைய கண்டோரால் விரும்பப்படுகின்ற கரிய பனையாரைக்கொண்டு, வண்டுகளாரவாரிக்கும் மாலையையணிந்த வாணன் மாறையாகிய வளவிய நகரிடத்து ஒப்பற்ற நின்குறையை முடிப்பாயாக. எ - று.

கொம்பனையார் மறுத்தகாலையில் தோடணிந்த முகமும், குரும்பை போன்ற கொங்கையும், உண்கண்ணுமுடைய கரும்பனையாரைக் கொண்டு என்னச் சிலேடையால் ஒரு பெண்ணுருத் தோன்றியவா றுணர்க.

மறுத்தாற் குறைமுடியெனவே, — குறிப்பான் மருளெனத்தோன்றி நிற்றலின், அவன் உயிரைத் தாங்கிக்கொண்டு நிற்கும் நிலைமையாயிற்று.

‡ தொல். சொல். கிளவியாக்கம், சூ. ௨௬.
‡‡ தொல். பொருள். மரபியல், சூ. ௪.

முன்கூறிய செய்யுட்களில் வெற்பன், சிலம்பன், பொருப்பன், என்று குறிஞ்சிநிலத்துத் தலைமகனைக் கூறி, இவ்விடத்தில் கடற்றுறைவா என்று நெய்தனிலத்துத் தலைமகனைக் கூறியவதனுன், முன்கூறிய தலைவனேயோ, இவன் வேறேயோ வெனின், அத்தலைவன்தானே இவன். ஐந்திணையில் எத்திணை கூறினும் அத்திணைக்குரிய கருப்பொருளாற் கூறப்படுமாயின், இக்களவி எத்திணைப்பாற்படுமெனின், நெய்தற்பாற்படும். அஃதென்னை யெனின்,— பனை நெய்தனிலத்துக் கருப்பொருளாதலான் கடற்றுறைவா எனக் கூறியவாறு. பனை நெய்தனிலத்துக் கருப்பொருளானவாறென்னை யெனின்,— குறிஞ்சி கற்பூமியாகலான் பனைக்காகாது, பாலைக்குத் தீந்து போவதல்லது பயிராவதில்லை. முல்லை வரகு, சாமை, முதிரை முதலாயின மக்கட்கு ஊணும், நிரையினங்கட்குப் புல்லு முதலியன உணவும், நிழலுமாக இருத்தலின் பனைக்காகாது. மருதநிலத்திற்கு வாவியும், குளனும், கமுகு, வாழை, செந்நெல், கரும்புமுதலியனவும் நீர்ச்சார்பாதலின், அந்நிலத்திற்கும் பனையாகாது. மணல்நிலத்திற் பயிராதலால் நெய்தனிலத்துக் கருப்பொருளாயிற்று.

தோடு - பனைமேலேற்றுங்கால் ஏடு; பெண்மேலேற்றுங்கால் செவியிற்குழை. குரும்பை - கொங்கை;—பனைக்குப் பண்புத்தொகை: பெண்ணுக்கு உவமைத்தொகை. உண்கண் பனைக்கு உறுகண்: பெண்ணுக்கு மையுண்ட கண். ஒலிதல் - ஆரவாரித்தல். 'வளநகர்க்கே' என்புழி வேற்றுமை மயக்கம். (௧0எ)

தலைமகள் கூற்றுயினவெல்லாம் மடற்கூற்றிற்கும், பாங்கி கூற்றுயின வெல்லாம் மடல்விலக்கிற்கும் உரித்தாயினவாறு காண்க.

தலைவி யிளைமைத்தன்மை பாங்கி தலைவற் குணர்த்தல்.

(இது வெளிப்படை.)

களவரும் பாகரு நீலங்கள் காமக் கடவுளுமால்
கொளவரும் பாவைங் குரும்பைக் குலஞ்செங் குமுதத்துவெண்
டளவரும் பாநண்ப னேதஞ்சை வாணன் றமிழ்வையைநாட்
டிளவரும் பாமிவண் மாட்டென்கொ லோநின் றிரப்பதுவே.

இ - ள். கருநீலம்போன்ற கண்களிற் களவு அரும்பவில்லை; காமக் கடவுளும் காதல்கொள்ள மார்பில் பசிய குரும்பைக்குலைபோல முலைகள் அரும்பவில்லை; செவ்விய குமுதம்போன்ற வாயில் வெண்டளவுபோன்ற பல் அரும்பவில்லை: தஞ்சைவாணன் தமிழ் வையைநாட்டின் அரும்பு போன்ற இவளிடத்தில் யான் சென்று நின்று இரப்பதெவ்வாறு? சொல்வாயாக. எ - று.

பொருளை உவமைப்பொருளாய்க்கூறியவெல்லாம் ஆகுபெயர். கொல்லும், ஓவும் அசைநிலை. (௧0அ)

தலைவன் தலைவி வருந்தியவண்ண முரைத்தல்.

(இது வெளிப்படை.)

சிலைபயில் வாணுதன் மின்னே பிறந்தவச் செவ்வியிலே
கொலைபயி ணாகக் குருளையைப் போற்குறி யோனிருந்த
மலைபயில் வார்தமிழ் வாணன்றென் மாறை மயிலனையாள்
அலைபயி லால்விழி யாலென தாவி யணங்கினளே.

இ - ள். சிலைவளைவு பழகும் வாணுதலையுடைய மின்னே! குறுமுனிவ னிருந்த மலையில் பழகிய தமிழ்கற்ற வாணன் தென்மாறைநாட்டு மயிலனையாள் பிறந்த அக்காலத்தே கொலைபழகிய நாகக் குட்டியைப் போல் அலையிற் பழகிய ஆலம்போன்ற விழியால் எனதாவியை வருத்தினன். எ - று.

சிலை - வில். பயிலல் நான்கும் பழகுதல். குருளை - குட்டி. குறியோன் - அகத்தியன். 'வாணுதன் மின்னே' என்றது சிறப்புருவகம். அலை - ஆகுபெயர். ஆலம் - ஆல் என விகாரப்பட்டது; நீலம் - நீல் என நின்றாற்போல. (௧௦௯)

பாங்கி தலைமகள் செவ்வியருமை செப்பல்.

பாங்கி தலைமகள் செவ்வியருமை செப்பல் எ - து. தலைமகளது காலப்பருவத்தின் அருமை கூறுதல்.

ஏடா ரலங்க லிலங்கிலை வேல்வெற்ப வேழுலகும்
வாடாமல் வந்தருள் வாணன்றென் மாறையில் வல்லியன்னாள்
சூடாள் குவளையு முல்லையுஞ் சூட்டுஞ் சுனையும் பந்தும்
ஆடா டனக்கென்கொ லோவடி யேன்சென் றறிவிப்பதே.

இ - ள். பூவார்ந்த மாலை யணிந் திலங்கப்பட்ட இலைபோலும் வேலையுடைய வெற்பனே! ஏழுலகும் வாடாமைக்குக் காரணமாகவந் தருளப்பட்ட வாணன் தென்மாறைநாட்டில் வல்லிபோல்வாள் குவளைப்போதும் முல்லையஞ்சூட்டுஞ் சூடாள், சுனையும் பந்துமாடாள், அவட்கு அடியேன் போய் அறிவிப்பதெவ்வாறு? எ - று.

ஏடு - ஆகுபெயர். அலங்கல் - மாலை. இலங்குதல் - ஒளிர்தல். இலைவேல் - உவமைத்தொகை. 'குவளையு முல்லையுஞ் சூட்டுஞ் சூடாள்' என்றும், 'சுனையும் பந்துமாடாள்' என்றும், ஒருவினைகொண்டு முடிந்தது. முல்லையஞ்சூட்டு - முல்லைப்பூவாற் சுட்டிபோலச்செய்து நெற்றியிற் கட்டுவது. 'தனக்கு' என்புழி சுட்டுவருவிக்க. கொல்லும், ஓவும் அசைநிலை. (௧௧௦)

தலைவன் செவ்வியெளிமை செப்பல்.

தலைவன் செவ்வி யெளிமைசெப்பல் எ - து. செப்புதற்குப் பதமெளி தெனத் தலைவன் கூறுதல்.

தேன்வந்த வாயிதழ்ச் சேயிழை யாயிளஞ் செவ்விநவ்வி
மான்வந்த வாள்விழி வஞ்சிக்கு நீதஞ்சை வாணன்வெற்பில்
யான்வந் தவாசென் றியம்புதி யேலவர் யாவதொன்றுள்
தான்வந்த வாவுட னேநின்னை யாரத் தழீஇக்கொளுமே.

இ - ள். தேன்போன்ற சொல்வந்த வாயிதழையும், செய்ய பூணையு முடையாய்! இளமையழகாகிய நவ்விமான்போல்வந்த வொளிபொருந்திய கண்ணையுடைய வஞ்சிக்குத் தஞ்சைவாணன் வெற்பில் யான் வந்தவாறு நீ சென்று கூறுதியேல், அவர் யாவதொன்று கூறாது, தான் ஆசையுடனே வந்து,நின்னை யாகத்தோடாகம் பொருந்தத் தழூவிக்கொள்வாள். எ - று.

தேன் - ஆகுபெயர். நவ்வி - மான்; இருபெயரொட்டுப் பண்புத் தொகை. 'மான்வந்த வாள்விழி'- உவமைத்தொகை. வந்தவா-வந்தவாறு. 'நீ சென்று' எனவும், 'தானவாவுடன்வந்து' எனவும் இயையும். (கககக)

என்னை மறைத்தபின் னெளிதென நகுதல்.

என்னை மறைத்தபின் னெளிதென நகுதல். எ - து. நீரிருவருமொத்து என்னை மறைத்தபின் இக்களவொழுக்கம் ஒழுகுதற் கெளிதென நகையாடிக் கூறல்.

மண்ணும் பயில்வித்து மொன்றினுஞ் சந்திர வாணன்வெற்பா
நண்ணும் புனலின்றி யங்குரி யாதுங்க ணல்வினையாற்
கண்ணுங் கருத்துங் கலந்தன வாயினுங் கண்ணினும்முள்
எண்ணுங் குறையென்னை நீர்மறைத் தாலிங் கியல்வதன்றே.

இ - ள். சந்திரவாணன் வெற்பனே! நிலனும் நிலத்துப் பழகிய வித்தும் இரண்டுமொத்துக் கூடினும், அவ்விரண்டும் நனையப்பொருந்தும் புனலின்றி முளையாததுபோல, நீங்கள் முன்செய்த நல்வினையால் கண்ணுங் கருத்துங் கலந்தனவாயினும், கருதுமிடத்து நும்முள்ளத்துள் எண்ணுகின்ற குறை நீரென்னை மறைத்தால் இவ்விடத்து முடிவதன்று. எ-று.

பயிலுதல் - பழகுதல். அங்குரியாது - முளையாது. எண்ணல் - கருதல். இயலுதல், பொருந்துதல்; பொருந்தல் எனவே முடிவின்மேல் நின்றது. இச்செய்யுளில் 'அங்குரியாது, அதுபோல' என்று சுட்டிக்கூறாது உவமமாயிற்று. என்னை, —

‡ "சுட்டிக் கூறா வுவம மாயிற்
பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன கொளலே," — என்னுஞ் சூத்திரவிதியால்,

‡‡ "மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து." — என்றாற்போலக்கொள்க.

அந்நகைபொறா தவன்புலம்பல்.

அந்நகைபொறா தவன் புலம்பல் எ - து. அவள் நகையாடிக் கூறு தல் பொறாமல் தலைவன் புலர்ந்து கூறுதல்.

வெவ்வே லெறிந்த விழுப்புண்ணின் மீட்டும் வெதுப்பியதோர்
செவ்வே னுழைப்பவர் சீலமன் றோதிரு வேமருவார்
வைவே லமர்வென்ற வாணன்றென் மாறை மயில்பொருட்டால்
நைவேனை யஞ்சலென் னாதின்ன வாறு நகைக்கின்றதே.

இ - ள். திருவையொப்பவளே! மருவார் வைவேலாற் செய்யும் போரைவென்ற வாணன் தென்மாறைநாட்டு மயில்போன்றவள் பொருட்டால் நைகின்ற வென்னை அஞ்சலையென் றோதாது இவ்வாறு நகைக்கின்றது, வெவ்விய வேலெறிந்து துன்பந்தரும் புண்ணில் மீட்டும் அழலிற் பழுக்க வெதுப்பியதோர் வேலை நுழைப்பவர் குணமன்றோ! எ - று.

வெவ்வேல் - கொடியவேல். விழுப்புண் - துன்பந்தரும்புண். வெதுப் பல் - அழலிடை வெதுப்பல். செவ்வேல் - பழுக்கக்காய்ந்தவேல். சீலம் - குணம். திரு - ஆகுபெயர். வை - கூர்மை. அமர் - போர். மயில் - ஆகு பெயர். ஆதலால், நகைக்கின்ற நின்குணமும், வேலைநுழைப்பவர்தங் குண மும் ஒக்குமென்பதாயிற்று. (ககரு)

பாங்கி தலைவனைத் தேற்றல்.

(இது வெளிப்படை.)

தன்கண் ணனையதன் பாங்கிய ருள்ளுந் தனக்குயிராம்
என்கண் ணருள்பெரி தெம்பெரு மாட்டிக் கிகன்மலைத்தார்
வன்கண் ணமர்வென்ற வாணன்றென் மாறையில் வந்தவளால்
புன்கண் ணடையலை நீயினி வாடல் புரவலனே.

இ - ள். புரவலனே! எம்பெருமாட்டிக்குத் தன் கண்போன்றுள்ள பாங்கியர் பலருளர், அப்பலருள்ளுந் தனக் குயிரொக்கும் என்னிடத்து அருள்பெரிது, பகையா யெதிர்ந்தார் கொடிய அமரைவென்ற வாணன் தென்மாறையில் வந்து அவளால் வருத்தமடையலையாய்: இன்று வாடற்க.

---

‡ தொல். பொருள். உவமவியல், சூ. எ.

‡‡ திருக்குறள், சே. கூ0.

எனவே, — பாங்கியர் பலருங் கண்பேணன்றவ ளென்றும், தானுயிர் போன்றவள், தன்னிடத் தருள்பெரிதென்றுங் கூறியவதனால், தன் சொல் மறுள், நீ யஞ்சாதை யென்று தேற்றியவாறாயிற்று. உயிராம் - உயிரொக்கும். இகல் - பகை. வன்கண் ணமர் - கொடியவமர். புன்கண் - வருத்தம். வாடல் - ஆவலித்து; வியங்கோள். (௧௧௪)

பாங்கி கையுறை யேற்றல்.

(இது வெளிப்படை.)

ஒலிதெண் கடல்புடை சூழுல கேழினு மூழ்வினைதான்
வலிதென் பதனை வயக்கிய தாற்றஞ்சை வாணன்வெற்பா
கலிதெங்கு மாவுங் கமுகும் பலாவுங் கதலிகளும்
பொலிதென் பொதியிலின் மேற்சந்த னடவிப் பூந்தழையே.

இ - ள். பொலிந்த தெற்கின்கணுள்ள பொதியமலையிடத் துண்டாகிய சந்தனக்காட்டிற் றோன்றிய இப்பூந்தழையானது ஒலியொடு கூடித் தெளிந்த கடன்மருங்கிற் சூழ்ந்த உலகேழிடத்தும் பழவினைதான் வலிதென்று சொல்வதனை இப்போது விளங்கச்செய்தது. எ - று.

எனவே, — கையுறையேற்றவா றாயிற்று. இதனுள் கருப்பொருள் மயங்கியவாறு ‡ "உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே." — என்னுஞ் சூத்திரவிதியா னுணர்க.

புடை - மருங்கு. ஊழ்வினை - பழவினை. வயக்கியது - விளக்கியது. கலி - ஒலாங்கலி தலைக்குறையாய் விகாரப்பட்டு நின்றது: தெங்கில் ஓர் வேறுபாடு. 'கலி தெங்கும்' என்புழி ‡‡ "எஞ்சுபொருட் கிளவி செஞ்சொலாயின்" என்னுஞ் சூத்திரவிதியால் உம்மைதொக்கு நின்றது. உம்மைகள் எண்ணின்கண் வந்தன. கதலி - வாழை. அடவி - காடு. பூந்தழை - பூவோடு கூடிய தழை. (௧௧௫)

கிழவோனுற்றல்.

கிழவோனுற்றல் எ - து. தலைவன் துயர்மாறிக் கூறுதல்.

மைப்போ தணிதொங்கல் வாண னென்னுமொன வல்வினையேற்
கப்போ தடைந்த வருந்துயர் நீங்கி யரும்பியபொற்
செப்போ ரிளமுலை யாணைகை வாண்முகத் திங்களைக்கண்
டிப்போ திளகிய தாலிந்து காந்தங்கொ லென்னெஞ்சமே.

இ - ள். குவளைப்போதாலியன்ற மாலையையணிந்த வாணன் பகைவரையொத்த வல்வினையேனாகிய எனக்கு முன்னாலடைந்த அரியதுன்ப நீங்கித் தோன்றிய பொற்செப் புவமையா யோகிய இளமுலையையுடைய

---

† தொல். பொருள். அகத்திணையியல், சூ. ௧௫.

‡‡ ஷை சொல். இடையியல், சூ. ௩௬.

பாங்கியது மகிழ்ச்சி ஒளிபொருந்திய முகந்தைக்கண்டு, இப்போது பிறந்த மகிழ்ச்சியா விளங்கியதாதலால், என்னெஞ்சம் சந்திரகாந்த மென்னுஞ்சிலே.

எனவே,— ஈரமின்றிப் புலர்ந்த தன்னெஞ்சம் பாங்கி முகத்திங்களேக் கண்டு, இப்போது மகிழ்ச்சியென்னும் நீருண்டாதலின், 'இந்து காந்தம்' என்று கூறியது.

மைப்போது - குவளைப்போது. ஒன்னார் - பகைவர். அரும்பல் - தோன்றல். கோல் - அசைநிலே. (௧௧௬)

பாங்கி கூற்றுயினவெல்லாம் குறைநேர்தற்கும், தலைவன் கூற்றுயினவெல்லாம் மடற்கூற் றெழிதற்கும் உரியவாறுணர்க.

இறைவன்றனக்குக் குறைநேர்பாங்கி இறைவிக்கு அவன்குறை யுணர்த்தல்.

(இது வெளிப்படை.)

இருவர்கண் டால்வரு மேதமென் றெண்ணி யெனக்கெதிரே
வருவர் வந்தாலுந்தன் வாய்திறவார் தஞ்சை வாணன்வெற்பின்
ஒருவர்நஞ் சார லுழையக லார்தழை யுள்ளதெல்லாந்
தருவர்வம் பார்முலே யாயென்கொ லோசெயத் தக்கதுவே.

இ - ள். வம்பார் முலையாய்! இருவர்கண்டால் குற்றம் வருமென் றெண்ணி யெனக் கெதிராயேவருவர், வந்தாலும் தம் வாய்திறந்தொன்றுஞ் சொல்லார், தஞ்சைவாணன் வெற்பில் ஒருவர் நம்முடைய மலைச்சாரலிடத்தைவிட் டகலார், இவ்வனத்திலுள்ள தழைகளையெல்லாங் கொய்துவந்து தருவர், அவர்க்கியாஞ் செய்யத்தக்கதென்னே? எ - று.

ஏதம் - குற்றம். உழை - பக்கம். வம்பு - கச்சு. கோல் - அசைநிலே.

இறைவி யறியாள்போன்று குறியாக்கூறல்.

இறைவி * * * கூறல் எ - து. பாங்கி இவ்வார்த்தை கூறவே தலைவி தான்கேட்டு அறியாள்போல மனத்திற் கருதாத வேறொன்றைக் கருதிக் கூறல்.

பாங்கி வினவியதற்குவிடைகூறுது வேறொன்றுகூறியது, ‡"செப்பும் வினவும் - வழாஅலோம்பல்" என்று கூறிய விதியின்றி வழுவைக் கூறுதலால் செப்புவழு என்னுங் குற்றந் தங்குமேயெனின், தங்காது. என்னை,— ஒருவர் வந்திருக்கின்றார் தழையுள்ளதெல்லாந் தருவர், அவர்க்கு யாம் என்செய்வோமென்று வினயவழி, இவள் பெருநாணுடைய ளாதலால், அவன் நினைத்தபடி செய்வோமென்று கூறத் தகாதாதலானும், இவள் கற்புக்கடன் பூண்டவளாதலானும், மறுக்கத்தகா தாதலானும், காமம் ஒருபாலும் நாணம் ஒருபாலும் ஈர்த்துக்கொண்டு நிற்றலின், ஒருபாற் சார

‡ தொல். சொல், கிளவியாக்கம், சூ. ௧௩.

மாட்டா ளாதலானும், என்செய்வோமென்று நெஞ்சிற் கவற்சியுற்று நடு வாக நின்றாளாகலான், அவள் கேட்டதற்கு விடை செவ்வன் கூறாது, அக்கணம் மனத்திற்றோன்றியவொன்று கூறுவது, இவ்விடத்திற்கு முன்னம் என்னும் உறுப்பாதலின், இவ்வாறு கூறுதல் செப்புவழு அன்றெனக்கொள்க.

இவ்வாறு கூறாது வாளாவிருக்கின் அமையாதோ வெனின், வாளாவிருக்கின் அவள் கூறியதற்கு உடம்பட்டாளாம்; உடன்படின் மேற்கூறுங் கிளவிகள் பலவற்றையும் நீக்கல்வேண்டு மாதலான், இவ்விடத்து இம்மொழி இவரிவர்க்குரியவென்று அவ்விடத் தவரவர்க் குரைப்பதுபற்றி, —

‡ "முன்னத்தி னுணருங் கிளவியு முளவே
யின்ன வென்னுஞ் சொன்முறை யான." — என்னுஞ் சூத்திர விதியால் இவ்வாறு கூறுதல் இயல்பெனக்கொள்க.

கலைதொடக் கீண்ட கருவியந் தேன்பல கால்கொடுமா
மலைதொடத் தூர்ந்து வருகின்ற தாற்றஞ்சை வாணன்வென்றிச்
சிலைதொடத் தாங்கெழில் சேர்நுத லாய்பயில் செம்பழுக்காய்க்
குலைதொடத் தோங்குபைங் கேழ்ப்பூக நாகக் குழாங்கவர்ந்தே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்றி சிலைதொடத்தாற்போலும் அழகு சேர்ந்த நுதலையுடையாய்! பிறைக்கோடு கீண்டக் கிழிந்த இறாற்றொகுதிகள் தங்கிய தேனூர்ந்து ஒரு முகமாய் வாராது பலகால்கொண்டு பெரிய மலையுச்சி தொடத்துக்கடந்து நெருங்கிச் சிவந்து பழுக்காய்க் குலைவைத் தோங்கப்பட்ட பசிய நிறத்தையுடைய பூகக்குழாத்தையும் நாகக்குழாத்தையும் கவர்ந்து வருகின்றது: நீ காண்பாயாக. எ - று.

கலை - பிறைக்கோடு. தொடுதல் - கீண்டுதல். கருவி - தொகுதி. தொடுத்து - தொடங்கி. நாகம் - புன்னை. குழாம் என்பது பூகந்துடனுங் கூட்டுக. கவர்தல் - கொள்ளுதல். (கக அ)

பாங்கி யிறையோற்கண்டமை பகர்தல்.

பாங்கி யிறையோற் கண்டமை பகர்தல் எ - து. பாங்கி தலைவன் நின்வயத்தனாக வந்தவதனைக் கண்டமை பகர்தல்.

திவாகர னேயன்ன பேரொளி வாணன்றென் மாறைநன்னாட்
டுவாமதி போலு மொளிர்முகத் தாயென் னொளிப்பதுன்மேல்
அவாவின னாகியோர் மானை வினவிவந் தானையின்றிக்
கவானுயர் சோலையின் வாய்வண்ட லாருழைக் கண்டனமே.

இ - ள். ஆதித்தனையொத்த பேரொளிவாணன் தென்மாறை நாட்டு வாமதிபோலும் ஒளிர்முகத்தாய்! நீ யொளித்துச்சொல்வது யாது கார

‡ தொல். சொல். எச்சவியல், சூ. கூ.

ணம்? உன்மேல் ஆசைகொண்டவனுகி ஓர்மானை வினவிவந்தவனை இப்போது இந்தத் திரளாயுயர்ந்த சோலையிடத்து விளையாடும் வண்டலம்பாவை பொருந்திய விடத்து யாங்கண்டனம். எ - று.

உலகத்தில் கலி இருள்மாற்றுந் தன்மையால் 'திவாகரனேயன்ன' எனக்கூறியது.

ஒளி - கீர்த்தி. உவாமதி - பூரணமதி. ஒளிர்தல் - விளங்குதல். கவுரன் - கிரட்சி. "மாயோனன்ன மால்வரைக்காவான்" என்றார் பிறரும். வண்டல் - ஆகுபெயர். 'வண்டலாடுழை' என்றும் பாட மோதுவாருமுளர். (௧௧௯)

பாங்கியைத் தலைவி மறைத்தல்.

(இது வெளிப்படை.)

செவ்வண்ண வேல்விழி யாய்தஞ்சை வாணன்றென் மாறைநன்னா
டிவ்வண்ண நீசொல்வ தேற்பதன் றுனின் னிடையெனத்தா [ட்
மெய்வண்ணம் வாடி வெறிதே வருந்தி விருந்தினராய்க்
கைவண்ண வார்தழை கொண்டுசென் றார்தழை கண்டுகண்டே.

இ - ள். செவ்வண்ணமாகிய வேல்போன்ற விழியினையுடையாய்! தஞ்சைவாணன் தென்மாறை நன்னாட்டில், நின்னிடைபோல வாடிப் பயனின்றி வருந்தி, கம்புனத்திற்குப் புதியோராய்க் கையிலே யழகிய நெடிய தழையைக் கொண்டுவந்து போனார் தம்மைக் கண்டுகண்டு, இவ்வண்ணம் நீ சொல்வ தேற்பதன்று. எ - று.

செவ்வண்ண வேல் - பகை வருடற் குருதிதோய்ந்த கொடிய வேல். ஆல் - அசைநிலை. இவ்வண்ணம் - இவ்வாறு. வெறிதே - பயனின்றியே. விருந்தினர் - புதியோர். வண்ணம் - அழகு. கண்டுகண்டு - அடுக்குமொழி. (௧௨௦)

பாங்கி யென்னை மறைப்ப தென்னெனத் தழால்.

பாங்கி * * * தழால் எ - து. இவ்வாறு மறைத்துக் கூறிய தலைவியை உனக்குநான் வேறோவென்று உவகையாய்த் தழுவிக்கொண்டு கூறல்.

பரக்கின்ற செவ்விதழ்ப் பங்கயப் பாதம் பணிந்துநின்னை
இரக்கின்ற தொன்றையு மெண்ணலை யாலெழு பார்முழுதும்
புரக்கின்ற கோன்றஞ்சை வாணன் பொதியிலிற் பொய்த்தென்னைநீ
கரக்கின்ற தென்னைகொ லென்னுயி ராகிய காரிகையே.

இ - ள். ஏழுலக முழுதுங் காக்கின்ற வேந்தாகிய தஞ்சைவாணனது பொதிய வரைக்கண் எனக் குயிராயொக்கும் காரிகையே! செவ்விதழ்

பரக்கின்ற பங்கயம்போன்ற பாதத்தைத் தொழுது யானின்னை யிரக்கின்ற தொன்றையு மெண்ணலையாய்! உண்மையை நீக்கி யென்னை மறைப்பதென்னோ? எ - று.

ஆல் - அசை. புரத்தல் - காத்தல். பொய்த்தல் - உண்மை நீக்கல். கரத்தல் - மறைத்தல். கோலி - ஐயம். 'தஞ்சைவாணன் பொதியில் என்னுயிராகிய காரிகை' எனவும், 'செவ்விதழ் பரக்கின்ற' எனவும் மாறுக. வருந்துழி வருந்தியும், மகிழ்ந்துழி மகிழ்ந்தும், இறந்துழி இறந்தும் இயைவதாதலின் 'என்னுயிராகிய காரிகை' என்று கூறினர். (கஉக)

பாங்கி கையுறை புகழ்தல்.

(இது வெளிப்படை.)

சூடத் தருவன வல்லவெல் லாம்படி சொல்லி னுந்தாம்
வாடத் தருவன வல்லநல் லாய்தஞ்சை வாணன் வெற்பர்
தேடத் தருவன வல்லதல் லாத சிலம்பினுள்ளார்
நாடத் தருவன வல்லகல் லார நறுந்தழையே.

இ - ள். நல்லாய்! உலகமெல்லாஞ் சொல்லினுஞ் சொல்லா தொழியினும் மலையிடத்துத் தோன்றிய இச்சந்தன நறுந்தழை சூடத்தருவன வல்லது, தாம் வாடத்தருவனவல்ல; அன்றியும், தஞ்சைவாணன் வெற்பர் தேடத்தருவன வல்லதல்லாத மலையினுள்ளார் நாடத்தருவனவல்ல. எ - று.

'படியெல்லாம்' எனமாறுக. 'சொல்லினும்' என்புழி உம்மை எதிர்மறையாகலின், 'சொல்லாதொழியினும்' என்பது வருவிக்கப்பட்டது. 'அல்லது' என்பது அஃறிணைப் பன்மைவினைக் குறிப்பு முற்றுச்சொல். நாடல் - கருதல். கல் - மலை. ஆர நறுந்தழை - சந்தனத்தழை. (கஉஉ)

இவற்றுள் பாங்கி கூற்றுயினவெல்லாம் குறைநயப்பித்தற்கும்,
தலைவி கூற்றுயினவெல்லாம் மறுத்தற்கும்
உரியவா றுணர்க.

தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல்.

தோழி கிழவோன் துயர்நிலைகிளத்தல் எ - து. பாங்கி தலைவனது வேட்கையால் கொண்ட துயர் நிலையைத் தலைவிக்குக் கூறல்.

வலையுங் குழல்வஞ்சி வாணன்றென் மாறை வளைக்களிறு
இலையுக் தழையும் பிடியொடு மேய்ந்து தெளிந்தவின்னீர்
சுலையுண்ட சோக நிழற்சோக நீங்கித் துயில்வதுகண்
டெலையுங் கடைக்கணி யாவிலை யாகிற்ப ரேதிலரோ.

இ - ள். அலங்கரிக்குங் கூந்தலையுடைய நம்புனத் தயலாராய் வந்தோர் வாணன் தென்மாறை வனையிடத்துக் களிறுபிடியொடு இனையுந் தழையுமேய்ந்து,சுனையிடத்துத் தெளிந்த இனிய நீரையுண்டு,துன்பம் நீங்கி, அசோகமரத்து நிழலின்கீழ்த் துயில்வதனைப்பார்த்து, என்னையுங் கடைக்கண்ணால் நோக்கி வருந்தாநிற்பர். எ - று.

'வஞ்சியயலார்' எனவும், 'களிறுபிடியொடு' எனவும், 'சுனைத் தெளிந்த வின்னீர்' எனவும், 'உண்டு சோகநீங்கி' எனவும் மாறுக. வனைதல் - அலங்கரித்தல். வஞ்சி - அண்மைவிளி. இனையாநிற்பர் - வருந்தாநிற்பர். ஏதிலர் - அயலார். கடைக்கணித்தல் - கடைக்கண்ணானோக்குதல். 'பிடியொடு துயிலுங் களிற்றைக்கண் டென்னையும் நோக்காநிற்பர்' எனவே நீ இதனை யறிந்திலையெனக் குறிப்பால் அறிவித்தவாறாயிற்று. (௧௨௩)

மறுத்தற் கருமை மாட்டல்.

மறுத்தற் கருமைமாட்டல் எ - து. இவ்வாறு கூறிய சொற்கட்கு விடை யின்மையால், இனி அவர்வரின் என்னால் மறுத்தற் கரிதெனப் பொருத்திக் கூறுதல். மாட்டல் - பொருத்துதல்.

கையுந் தழையுமுன் காண்டொறுங் காண்டொறுங் கட்டுரைத்த
பொய்யுந் தொலைந்தன பூந்தழை போலரி போர்த்துநஞ்சும்
மையுங் கலந்துண்ட வாள்விழி யாய்தஞ்சை வாணன்வெற்பர்
மெய்யுந் துவண்டதென் னான்முடி யாது வெளிநிற்கவே.

இ - ள். செவ்வரியை மேற்கொண்டு நஞ்சும் மையுங் கலந்துண்ட வாள்போல் விழியாய்! இவ்வனத்திலுள்ள மாந்தழைகளெல்லாம் நமக்குக் கொண்டுவந்து கொண்டுவந்து வாடியெறிதலால், அப் பூந்தழைகள் தொலைந்தாற்போல, வாகையுந் தழையும் எதிரே காணுந்தோறும் காணுந்தோறும், யான் உறுதிச்சொல்லா யுரைத்த என்னிடத்தி லுண்டான பொய்யெல்லாந் தொலைந்தன; அன்றியும், தஞ்சைவாணன் வெற்பர் மெய்யும் அலைந்தலைந்து துவண்டதாதலால், இனியவர்வரின் வெளியாய் நிற்க என்னால் முடியாது. எ - று.

எனவே, — அவர் வரின் மறையவேண்டு மென்பதாயிற்று. கட்டுரைத்தல் - உறுதிச்சொற்கூறுதல். அரி - செவ்வரி. (௧௨௪)

தலைவன் குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல்.

தலைவன் குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல் எ - து. தலைவனென்னுங் குறிப்பு நம்பக்கல் இரப்பவன்போற் றோற்றவில்லை, வேறு நினைப்பானாகத் தோன்றியதென்று ஒழுங்குபடக் கூறுதல்.

விடையான் மிசைவரு மேருவில் லானொடு மேழிவென்றிப்
படையா னொடும்வெம் பகைகொள்வ தோபகல் போலுமெய்ம்மை
உடையா னுயர்தஞ்சை வாணனென் னொன வொல்கியநுண்
இடையாய் பிறிதுகொ லோவறி யேன்வெற்ப ரெண்ணுவதே.

இ - ள். நடுவுநிலைமையையும் வாய்மையையு முடையான் எல்லார்க்கும் புகழாலுயர்ந்த தஞ்சைவாணனுக்கு ஒன்னொனத் துவண்ட நுண்ணிய இடையையுடையாய்! வெற்பர் எண்ணுவது விடையான்மேல்வருந் தன்மையையுடைய மேருவில்லானொடும், மேழியைத் தனக் குறுப்பாகவுடைய வெற்றிப்படையை யுடையானொடும் வெய்ய பகைகொள்வதோ! பிறிதோ! அறியேன்! எ - று.

விடை - இடபம். விடையான் - பண்புத்தொகை. மேருவில்லான் - சிவன். மேழிவென்றிப்படை - கலப்பை. உடையான் - பலதேவன். சிவனுடன் பகைகொள்ளுதல் - எருக்கமாலை என்புமாலை யணிதல். பலதேவனொடு பகைகொள்ளுதல் - பனையைவெட்டுதல். பனையவனுக்குக் கொடியெனவே மடலேறுங் குறிப்புத்தோன்றியது. 'பிறிது' என்பதனால் வரைபாய்தல் கொள்க. பகல் - நடுவு நிலைமை. போலும் - அசைநிலை. ‡"ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்" என்பதனாலறிக. மெய்ம்மை - வாய்மை. கொல் - ஐயம். ஓகாரம் - அசைநிலை. (௧௨௫)

தோழி தலைவியை முனிதல்.

(இது வெளிப்படை.)

தூற்றா தலரை மறைப்பவர்க் கேகுறை சொல்லுகுற்றம்
ஏற்றா தொழியெனை யெம்பெரு மாட்டிசென் றேற்றவர்க்கு
மாற்றா தருள்செங்கை வாணன்றென் மாறையில் வந்துநெஞ்சம்
போற்றாது நின்றய லேன்சொன்ன தீங்கு பொறுத்தருளே.

இ - ள். எம் பெருமாட்டி! தூற்றாதலரை மறைக்கின்ற நினக்கு உண்மையானவர்க்கே நின் மனக்குறையைச் சொல், என்னைக் குற்றமேற்றாது விடு; சென்றேற்றவர்க் கில்லையென்னாது கொடுக்குஞ் செங்கையை யுடைய வாணன் தென்மாறைநாட்டில், நின் பக்கத்தில் வந்து நெஞ்சத்தைக் காவாமல், அயலேனாகிய யான் அறியாமற் சொன்ன குற்றத்தைப் பொறுத்தருள்வாயாக. எ - று.

'எனைக் குற்றம்' எனவும், 'வந்து நின்று' எனவும் இயையும். போற்றாது - காவாது. (௧௨௬)

தலைவி பாங்கியை முனிதல்.

தலைவி பாங்கியை முனிதல் எ - து. பாங்கியை முனிந்து தலைவி தன்னுட் கூறல்.

---

‡ தொல். சொல். இடையியல், சூ. ௩௦.

மற்றே தவர்நினை வார்தஞ்சை வாணன் வரையின்மூன்னாள்
பொற்றேரின் வந்து புணர்ந்துசென் றூர்தம் பொருட்டுநம்மைக்
குற்றேவன் மங்கை குறையிரக் தாளென்னுங் குற்றமிந்நாள்
எற்றே தவறுநம் பாலில்லை யாகவு மெய்தியதே.

இ - ள். தஞ்சைவாணன் வரையில் மூன்றுநாள் பொற்றேரினில் வந்து புணர்ந்து சென்றூர், அவர் மற்றேது நினைவார், அவர் தம்பொருட்டு நம்மைக் குற்றேவல் மங்கையாகிய இவள் குறையிரந்தாளென்னுங் குற்றம் இந்நாள் நம் பக்கலில்லை யாகவுந் தவறெய்துவது எத்தன்மைத்து?

மற்று - அசைநிலை. ‘ஏதை’ என்புழி இரண்டனுருபு தொக்கது. மூந்நாள் - மூன்றுநாள். அவையாவன,— இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் என்பன. ‘தம்பொருட்டு’ என்புழி ‘அவர்’ என்னுஞ் சுட்டுப்பெயர் வருவிக்க. ‘அவர்மற்றேது நினைவார்’ எனவும், ‘இந்நாள் நம்பால்’ எனவும், ‘தவறெய்தியதோ’ எனவும் இயையும். (௧௨௭)

தலைவி கையுறை யேற்றல்.

(இது வெளிப்படை.)

ஆற்றுந் தலைவ ருருந்துய ராற்றினு மாற்றிலனுண்
மாற்றும் புனையின் மயிலனையாய் தஞ்சை வாணன்றெவ்வின்
போற்றுங் கொடுவினை யேன்புனை யாவிடிற் போந்தலரே
தூற்றுந் தழையென்றி தொன்றங்ங னேவந்து தோன்றியதே.

இ - ள். மயில்போல்வாய்! தஞ்சைவாணன் பகைபோல மிக்காய்க் கூறுங்கொடிய வினையேன் அணிந்தேனுயின் நாணை மாற்றும், அணியாது தடுத்தேனுயின் எங்குஞ்சென்று அலரையே தூற்றும், தழையென்று பெயரிட்டுக்கொண்டு இஃதொன்று எவ்விடத்திலேயிருந்து இவ்விடத்தின்றோன்றியது! முன் நல்வினையாற்றுந் தலைவர் அரிய வேட்கையை ஆற்றல்செயினும் யானுற்றலன். எ - று.

எனவே,— தலைவி கையுறை வாங்கினளாயிற்று. என்னை,—

“நல்வினை யாற்று முயர்நாண மாற்றுமலர்
தூற்றலினுல் வந்த துயர்.”

இன் ஐந்தனுருபு ஒப்பின்கண்வந்தது. போற்றல் - மிக்காய்க்கூறல். யான் என்பது தோன்றா எழுவாய். தெவ்வு - பகை. (௧௨௮)

இவற்றுள் பாங்கி கூற்றாயினவெல்லாங் குறைநயப்பித்தற்கும், தலைவி கூற்றாயினவெல்லாங் குறை நேர்தற்கும் உரித்தாயினவாறு காண்க.

ஏன்னும்மை தொக்குநின்று நிரனிறைப்பொருள் வந்தவாறுணர்க. இவர்தல் - ஏறுதல். சாய் - கோரை. ஒசித்தல் - அசைத்தல். சாயை - நிழல். சாரல் - மலைப்பக்கம். (கரூஉ)

இறைவி யிறையோனிடந் தெதிர்ப்படுதல்.

(இது வெளிப்படை.)

முயங்கிய நூபுரப் பங்கயத் தாளு முலைசுமந்து
தயங்கிய நூலிடை தானுமென் போலத் தளர்வுறுமிங்
கியங்கிய வாறென் மனத்திரு ணீக்கவென் றேதுணிந்தோ
வயங்கிய சீருடை யான்வாணன் மாறை மணிவிளக்கே.

இ - ள். விளங்கிய புகழையுடையோனாகிய வாணன் தென்மாறை நாட்டு மணிவிளக்குப் போல்வாய்! நூபுர முயங்கிய பங்கயம்போன்ற தாளும், முலையைச் சுமந்து தள்ளாடிய நூல்போன்ற விடைதானும் என்னைப்போலத் தளர்வுறும்; இவ்விடத்துச் சஞ்சரித்தவாறு என் மனத்துன்பத்தை நீக்கவென்று துணிந்தோ? சொல்வாயாக. எ - று.

'நூபுரமுயங்கிய பங்கயத்தாள்' என இயையும். நூபுரம் - சிலம்பு. தயங்கல் - தள்ளாடல். இயங்கல் - சஞ்சரித்தல். ஏகாரம் - ஈற்றசை. ஓகாரம் - வினா. வயங்குதல் - விளங்குதல். சீர் - கீர்த்தி. விளக்கு - ஆகுபெயர். தலைவியை விளக்கு என்று கூறினமையான் மனத்துன்பத்தை இருள் என்று கூறியது. இருள் - ஆகுபெயர். (கரூகூ)

புணர்ச்சியின்மகிழ்தல்.

(இது வெளிப்படை.)

தருந்தாரு வஞ்சுங் கொடையுடை யான்றஞ்சை வாணனின்சொல்
செருந்தார் பசுந்தமிழ்த் தென்வரை மேற்செம்பொன் மேருவெற்பா
கருந்தாரை நஞ்சுமிழ் வாசுகி யால்வெண் கடல்கடைந்து [ல்
வருந்தா வமுதளித் தாள்வல்ல ளாமிம் மடக்கொடியே.

இ - ள். கேட்டவை பலவுந்தருந் தாருமஞ்சப்பட்ட கொடையையுடையானாகிய தஞ்சைவாணன் இனிய புகழையும், செருந்திமரச்சோலையும், பசிய தமிழையுமுடைய பொதியமலைமேல், செம்பொன் மேருவெற்பால், கரிய தாரையாய் நஞ்சை யுமிழப்பட்ட வாசுகியென்னும் பாம்பால், வெண்மை நிறம்பொருந்திய கடலைக் கடைந்து, வருந்தாத அமுதை யளித்தாளாதலால், இம்மடக்கொடி வல்லளாம். எ - று.

தருந்தாரு - கற்பகம். தென்வரை - பொதியமலை. தாரை - நீர்வரும் வழி; சலதாரை என்றாற்போல. வாசுகி - கடல்கடைந்த பாம்பு. வெண்

கடல் - பாற்கடல். இவ்வாறு வருத்தப்படாமல் அமுதம் ஈந்தனால் 'வல்லள்' என்று கூறியது. வல்லள் - உயர்திணை யொருமைவினைக் குறிப்புமுற்று. (கூசு)

புகழ்தல்.

(இது வெளிப்படை.)

மயனார் விதித்தன்ன மாமதில் சூழ்தஞ்சை வாணன் வெற்பில்
பயனார் பயோதரப் பாவையன் னீர்பசும் பொற்குழைதோய்
நயனார விந்தத்து நஞ்சூறும் வாயிதழ் நல்லமுதம்
அயனார் படைத்தில ரேலடங் காதவ் வரனுக்குமே.

இ - ள். தெய்வத்தச்சனார் விதித்ததுபோன்ற அரிய செயலாகிய பெரிய மதில்சூழ்ந்த தஞ்சைவாணன் வெற்பில் இன்பப் பொருளார்ந்த முலையையுடைய சித்திரப் பாவைபோல்வீர்! பசிய பொன்னாற் செய்த குழையைத்தொடும் நயனமாகிய தாமரையிலிருக்கும் நஞ்சான தடங்குமாறு, நும் வாயிதழூடு நல்லமுதம் அயனார் படையாமற் போனாராகில், முன்பு கடலிற்பிறந்த நஞ்சையடக்கிய அவ்வரனாற்கும் அடங்காது. எ - று.

பயன் - இன்பப்பொருள். பயோதரம் - முலை. தோய்தல் - தொடுதல். 'நயனாரவிந்தம்' - ஏகதேசவுருவகம். இதழமுதமுண்டு விடந்தணிந்தானாதல் இவ்வாறு கூறியதென்றுணர்க. மயன் - தெய்வத்தச்சன். ()

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

தலைமகளைத் தலைமகன் விடுத்தல் எ - து. தலைமகளைத் தலைமகன் ஆயக்கூட்டத்திற் செல்லவிடுதல்.

நேயம் புகலிட மின்றிநின் பால்வந்து நின்றதுபோல்
ஆயம் புகல வடைந்தரு ணீயடை யாதமன்னர்
வாயம் புகவில் வணக்கிய வாணன்றென் மாறைநன்னீர்
தோயம் புகரிணை வேல்விழி யாய்நின் றுணையுடனே.

இ - ள். சரணென்றுவந்தடையாத பகைமன்னரிடத்து அம்புகளுதிர வில்லைவளைத்த வாணன் தென்மாறைநாட்டுள்ள நல்லநீரிலே தோய்த்துப் பதஞ்செய்த பழகிய புகர்நிறத்தையுடைய இணைவேல்போலும் விழியாய்! நீ யன்புசொல்வதற்கிடமில்லா நின் பக்கலிலேவந்து நின்றதுபோலச் சூழப்பட்ட ஆயக்கூட்டந் தங்களன்பைச் சொல்லத்தக்கதாக நின் பாங்கியுடனே நீயடைந்தருள்வாயாக. எ - று.

நேயம் - அன்பு. நேயம் புகல்வதற்கு இவள்போலும் வேறொருவரின்மையால், இவளிடத்து வந்து சூழ்ந்ததுபோலுமென்று கூறியவாறுணர்க. வாய் - இடம். அம்புக - அம்புதிர. புகர் - இரத்தக்கறை. (கஙகூ)

பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டல்.

பாங்கி * * * காட்டல் எ - து. குறியிடத்து நிறுத்திப்போயின பாங்கி தலைவன் போயினபின் தான் கையுறைக்குப் போயின பாவனையாய்க் கையுறைகொண்டுவந்து காட்டல்.

பொய்போ லிடைநின் விழிபோற் குவளையம் போதிவைநின்
மெய்போ லசோக மிளிர்பூந் தழையிவை மெல்லியனின்
கைபோற் கவின்கொள்செங் காந்தளம் போதிவை கண்டருள்யான்
மைபோற் குழலிதந் தேன்றஞ்சை வாணன் வரையினின்றே.

இ - ள். மையை யொக்குங் குழலையுடையாய்! தஞ்சைவாணன் வரையினின்று யான் நினக்குத் தந்தேன். பொய்யையொக்கு மிடையாய்! நினது கண்களையொக்குங் குவளைப்போதிவை; நினது மெய்யைப்போலொளிவிடும் அசோகப்பூந்தழை இவை; மெல்லிய இயலையுடைய நினது கையைப்போ லழகுகொண்ட செங்காந்தட்போது இவை: நீ கண்டருள்வாய். எ - று.

மிளிர்தல் - ஒளிவிடுதல். கவின் - அழகு. மை - மேகம், 'பொய்போலிடை,' 'மைபோற் குழலி' என இரண்டு முன்னிலை வந்தவாறு காண்க. 'தஞ்சைவாணன் வரையின் யான்' என மாறுக. அம் மூன்றுஞ் சாரியை. (கஙஎ)

தலைவியைப் பாங்கிற் கூட்டல்.

(இது வெளிப்படை.)

குனிநாண் மதிநுதற் கோகில மேநின் குழலிலெல்லாப்
பனிநாண் மலரும் பறித்தணிந் தேனிந்தப் பார்மடந்தை
தனிநா யகன்றஞ்சை வாணன்றன் சாரற் றனித்துநில்லா
தினிநா மகன்றிளை யார்விளை யாடிட மெய்துதுமே.

இ - ள். வளைந்தநாட்கொண்ட மதிபோன்ற நுதலையுடைய கோகிலமே! நினது குழலினிடத்தில் வனத்திலுள்ள முறுக்கவிழ்கின்ற மலரனைத்தும் பறித்தணிந்தேன்; இந்த பூமடந்தைக் கொப்பற்ற நாயகனான தஞ்சைவாணனது குளிர்ந்த மலைச்சாரலிடத்துத் தனியாய் நில்லாது இவ்விடத்தினின்று மகன்று, இப்போதிளையார் விளையாடிடத்தை யாமெய்துவோம். எ - று.

குனிநாண் மதி - பிறை. 'மதிநுதற் கோகிலம்' என்றது சிறப்புருவகம். தனி - ஒப்பின்மை. நாண்மலர் - முறுக்கவிழ் மலர். (கஙஅ)

நீங்கித் தலைவற் கோம்படை சாற்றல்.

நீங்கித் * * * சாற்றல் எ - து. தலைமகளை யாயத்திற் கூட்டி மீண்டு வந்து தலைவற்கு ஓம்படைசாற்றல். ஓம்படை - மறவாமை.

சின்னாண் மலர்க்குழல் காரண மாச்செவ்வி பார்த்துழன்று
பன்னா ளுரைத்த பணிமொழி நோக்கிப் பழிநமக்கீ
தென்னா திடைப்பட்ட வென்னிலை நீமற வேலிறைவா
தன்னாக மெய்ப்புக ழான்றஞ்சை வாணன் றமிழ்வெற்பிலே.

இ - ள். இறைவனே! தன்னாகத்தை மெய்ப்புகழாய் நிறுத்தின தஞ்சைவாணன் தமிழ் வெற்பிடத்துச் சில நாண்மலரா யணிந்த குழலை யுடையாள் காரணமாக, அவளது பதம்பார்த்து வருத்தப்பட்டு, நேற்று மின்றுமாகிய பலநாளுரைத்த தாழ்ந்த மொழியைக் கருதி, நமக்கிதுபழி யென்று சொல்லாது, நம்மிருவர்க்கும் நடுப்பட்ட என்னிலைமையை நீ மறவா திருக்கக்கடவை. எ - று.

செவ்வி - காலம். உழன்று - வருந்தி. பணிமொழி-தாழ்ந்தமொழி. தன்னாகம் - தன்னுடல். இரண்டோளென்பதனைப் பன்னாளென்று கூறிய தென்னையெனின், ஒன்றல்லனவெல்லாம் பலவென்பது தமிழ் நடையாகலின் கூறியவாறென்றுணர்க. (கருக)

உலகியன் மேம்படவிருந்து விலக்கல்.

உலகியன் மேம்பட விருந்து விலக்கல் எ - து. உற்றூர் அயலூரி விருந்துவந்தால், அவர்க்கு ஊண்கொடுத் துபசாரஞ்செய்தல் உலகியலாதலால், அவ்வுலகியல் பெருமைப்படத் தலைமகனை எம்மூர்க்குவந்து இருந்து போமெனக்கூறிப் பகற்குறியை விலக்கல்.

ஆயின், விருந்தென்பது உண்டிக்குப் பெயரோவெனின், விருந்து என்பது புதுமை, உலகின்கண் மருவி ஊண்மேனின்றது. என்னை, ஒருவன் ஒருவற்கு விருந்து கூறினானெனின், ஊண்கூறினனென்பதல்லது புதுமை கூறினனென்னும் பொருடரா தாதலான், விருந்தென்றது ஊணென்றே கொள்க.

வலைப்பெய்த மான்றசை தேன்றோய்த் தருந்தி மனைமுலைப்பால்
உலைப்பெய்த வார்தினை மூரலு முண்டுளங் கூறுவகை
தலைப்பெய்த நாளனை யான்றஞ்சை வாணன் சயிலத்தெம்மூர்
இலைப்பெய்த தாழ்குரம் பைத்தங்கி னாலுமக் கென்வருமே.

இ - ள். தலைவரோ! வலை சுற்றமிட்ட மானினது தசையைத் தேனிற் றோய்த்து அருந்தி மனை முலையினின்றும் பாலினை யுலையாகப் பெய்து அட்டவெடித்த தினைச்சோற்றை யுண்டு, உளத்தின் மிகுந்த உவகை

அஃதாவது, ஒருகூற்றுப் பகற்குறி. ஒருகூற்றுப் பகற்குறி யாதெனில், தலைவன் மற்றைநாள் தன் வேட்கை மிகுதியால் பகற்குறியிடத்து வந்து நிற்க, தலைவியைப்பாங்கி குறியிடத்துச் செலுத்தாது மறுத்துக் கூறத் தலைவன்வருந்திப்போதலாதலான் பகற்குறியாகாது, ஒருசார்பகற்குறியாயிற்று.

* "இரங்கல் வன்புறை யிற்செறிப் புணர்த்தலென்
றொருங்கு மூவகைத் தொருசார் பகற்குறி." — என்னுஞ் சூத்திரவிதியால் ஒருசார்பகற்குறி மூவகைப்படுமெனக்கொள்க.

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுதுகண் டிரங்கல்.

(இது வெளிப்படை.)

ஆழ்ந்தார் தமக்கரு ளாதவர் போலிவ் வளவிலன்பு
சூழ்ந்தார் செலத்தொங்கல் சூழ்குழ லாய்சொற் பொருள்படைத்து
வாழ்ந்தார் புகழ்தஞ்சை வாணனைப் பேணலர் மானவெய்யோன்
வீழ்ந்தார் கலிக்கரந் தான்பனி மாலை வெளிப்படவே.

இ - ள். மாலைசூழ்ந்த குழலினையுடையாய்! மிடியில் மூழ்கினர்க்குக் கொடாதவர்போல் இந்தமட்டில் அன்புசூழ்ந்தார் பிரிந்துபோகச் சொற்பொருள்படைத்து வாழும் புலவராற்புகழப்பட்ட தஞ்சைவாணனை விரும்பாதவர் கடலில்விழுந்து மறைதல்போல, கதிரோன் பனியொடு கூடிய மாலைக்காலம் வெளிப்படக் கடலில்வீழ்ந்து மறைந்தான் : யா னென்செய்வேன்! எ - று.

ஆழ்ந்தார் - மிடியிலாழ்ந்தார். எனவே, — ஆழ்ந்தார் தானாகவும், கொடாதவர் தலைவராகவும் கூறியவாறாயிற்று. சூழ்ந்தார் - பொருந்தினார். பேணலர் - விரும்பாதவர். ஆர்கலி - கடல். கரத்தல் - மறைதல். பனிமாலை - அந்தியம்போது. 'வெளிப்பட்டதே' யென்று பாடமோதுவாருமுளர்.

இக்கிளவி பாங்கி நோக்கிக் கூறுதலும், மாலையம்பொழுதை நோக்கிக் கூறுதலும், தன்னுட் கூறுதலுமென மூவகைப்படும். அவற்றுள் இச்செய்யுள் பாங்கியைநோக்கிக் கூறியது.

† "புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ண தோநின் றுணை." — என்பது மாலையுடன்கூறியது.

†† "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்." — என்பது தன்னுட்கூறியது. (௧௪௨)

---

* அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. ௯௭.

† திருக்குறள், செ. ௧௨௨௨. †† திருக்குறள், செ. ௧௨௨௭.